SAMARASAM
# சமரசம்
மாதம் இருமுறை இதழ்
16-31 ஜனவரி 2026 ₹25
Volume : 46 Issue : 15
www.samarasam.net

வளர் இளம் தலைமுறையை என்ன செய்யப் போகிறோம்?



ஃபலஸ்தீனப் போராட்டத்தின் அடையாளம்
**அபூ உபைதா**

## உலகப் பொருளாதாரமும் இஸ்லாமியப் பொருளாதாரமும்



## ஹபீபீ
நூறாண்டுகளாகப் பேசப்படாத வாழ்க்கை

இயக்குநர் மீரா கதிரவன் நேர்காணல்



49ஆவது சென்னை புத்தகக் கண்காட்சியில்
IFT-யின் புதிய வெளியீடுகள்
அத்தியாயம் 42
தஃப்ஹீமுல் குர்ஆன்
திருக்குர்ஆன் விளக்கவுரை
அத்தியாயம் : 42
அஷ்ஷூரா
மௌலானா சையத் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்)
ஹுஸைன்
டாக்டர் அலீ முஹம்மத் அஸ்ஸல்லாபி
உணர்வு - ஊக்கம் - உறுதியுடன்
இறைவனை முழுமையாகச் சார்ந்திருத்தல்
சையத் சஆதத்துல்லாஹ் ஹுஸைனி
இஸ்லாமும் அடிமைத்துவமும்
ஷேக் முஹம்மத் காரக்குன்னு
உள்ளத்தைத் தொடும் உரையாடல்கள்..!
ஷேக் ஜாஸிம் முஹம்மத் அல்மத்தூ
டாக்டர் முஹிய்யித்தீன் காஜி
மதச்சார்பின்மையும் இஸ்லாமிய இயக்கமும்
சையத் சஆதத்துல்லாஹ் ஹுஸைனி
நான் முஸ்லிமாக இருப்பதில் பெருமைப்படுகிறேன்
Dr. V. அப்துர் ரஹீம்
இஸ்லாமியப் பொருளாதாரம்
நீதி • நியாயம் • சமூகநலன்
ஷேக் முஹம்மத் காரக்குன்னு
interest free banking
இயக்க ஊழியர் யார்?
K. ஜலாலுத்தீன்
08 - 21 JAN 2026
YMCA நந்தனம், சென்னை
அரங்கு எண் F57
www.iftchennai.in
8668057596

உள்ளே...




வளர் இளம் தலைமுறையை என்ன செய்யப் போகிறோம்? - தலையங்கம் 7

ஹபீபி நூறாண்டுகளாகப் பேசப்படாத வாழ்க்கை - இயக்குநர் மீரா கதிரவன் நேர்காணல் 8

உலகப் பொருளாதாரமும் இஸ்லாமியப் பொருளாதாரமும் - ஹர்சில் ஹலீம் 14

ஃபலஸ்தீனப் போராட்டத்தின் அடையாளம் அபூ உபைதா - நாகூர் ரிஸ்வான் 18

மேடை: ஆசிரியர்களைக் கொண்டாடுவோம்! - Dr. K.V.S. ஹபீப் முஹம்மது 20

மக்கள் சேவையே மகத்தான சேவை - புதுக்கோட்டை மு.ஜாகீர் உசேன் 31

நாளைத் தீர்மானிக்கும் காலை - ஹாஜா மாலிக் 34

சரித்திரம் படைக்கும் ஒரு சாதனை நாயகன் - அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது 36

சிறுகதை : உண்மையான சொத்து - மலர்மதி 38

இஸ்லாமிய வெறுப்புக் குற்றங்கள் - K.ரியாஸ் 42

நாவல்: அக்கரைப் பச்சை - ஜரினா ஜமால் 44

தொழில்நுட்ப உலகின் இணைய நட்சத்திரம் உசைர் மாலிக் - பேராசிரியர் N.அமானுல்லாஹ் 50

● கடிதங்கள் ● திருக்குர்ஆன் விரிவுரை ● நபிமொழி விளக்கம் ● புதிர் போட்டி ● சிறார் உலகம்



ஆசிரியர் - வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

*படைப்புகளை அனுப்ப :*

**samarasam.article@gmail.com**

*சந்தா - விநியோகப் பிரிவு*
*விளம்பரத் தொடர்புக்கு :*

**M.அப்துல் காதர் 95661 53142**

*விளம்பரங்களை அனுப்ப :*

**samarasam.advt@gmail.com**

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு | : | ரூ.550 |
| அரையாண்டு | : | ரூ.280 |
| வெளிநாடு (ஓர் ஆண்டு) | : | ரூ.3500 |

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

*கடிதங்கள், படைப்புகள் அனுப்ப வேண்டிய முகவரி:*

பொறுப்பாசிரியர்,
சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
● 044-2662 0091
● samarasam.article@gmail.com
● www.samarasam.net



## இவர்களிடம் எப்படி நீதியை எதிர்பார்க்க முடியும்?

வகுப்புவாத சிந்தனை கொண்டவர்கள் தங்கள் பொறுப்புக் காலத்திற்குப் பிறகு ஆளுநர் பதவி போன்ற பொறுப்புகளை அடைவதற்காக ஒன்றிய அரசைத் திருப்திப்படுத்தும் தீர்ப்புகளை வழங்குகின்றார்கள். இவர்களிடம் எப்படி நீதியை எதிர்பார்க்க முடியும்? திருப்பரங்குன்றத் தீபப் பிரச்னையில் எதிர்தரப்பினரின் கருத்துகளைக் கேட்காமல் தாமே நேரில் சென்று கள ஆய்வு செய்து தான் வழங்கிய தீர்ப்பை நடைமுறைப்படுத்தத் துடிப்பது தவறான முன்னுதாரணமே!

– தொலைப்பேசி மீரான், சென்னை

## கிழித்தெறியப்பட்ட முகமூடி

ஜரினா ஜமாலின் அக்கரைப் பச்சை தொடரில் வீட்டில் சுத்தத்தைப் பற்றி கூறிய வரிகள் என்னை மிகவும் கவர்ந்தது. மேடை பகுதியில் சு.வெங்கடேசன் MP அர்த்தம் பொதிந்த உரையால் பாஜக அரசின் முகமூடியைக் கிழித்தெறிந்து விட்டார். S.A.K ஜெய்லானி எழுதிய தொடரி பயணங்களில் தொடரும் அத்துமீறல்கள் படித்தேன். ஒன்றிய அரசின் திட்டமிட்ட செயல் வேலை வாய்ப்பென தமிழ்நாட்டுக்குள் வடவரை குடியேற்றி அவர்களுக்கு வாக்குரிமை அளித்து, சுலபமாக ஆட்சிக் கட்டிலை அலங்கரிக்க நினைப்பதன் விளைவுதான் இந்த அத்துமீறல்கள்.

– சோழா புகழேந்தி, கரியமாணிக்கம்

## அறியாத அரிய தகவல்கள்

நீதியை மீட்டெடுக்க வேண்டிய தருணம் தலையங்கம் பல கேள்விகளை முன் வைத்துள்ளது. எதற்குமே விடை இல்லை. இந்தியாவில் சிறுபான்மையினரின் உரிமைகள் மிகத் தெளிவான கட்டுரை. தொடரிப் பயணங்களில் தொடரும் அத்துமீறல்கள் ஒவ்வொரு பயணியும் அனுபவித்த, அனுபவிக்கும் பிரச்னைதான். ரயில்வே நிர்வாகம் கண்டு கொள்ளாதது ஏனோ? திருப்பரங்குன்றம் தீபப் பிரச்னை பொய்யும் மெய்யும் - புரிந்து கொள்ள வேண்டிய விஷயம். நாளந்தாவை இடித்தது யார்? பல அரிய தகவல்கள், அறியாத் தகவல்களைத் தந்துள்ளது தொகுப்பு.

– ஐ. சாந்த் உஸ்மானி, ஆலந்தூர்

## விசாலமான பார்வை

நாளந்தாவை இடித்தது யார்? கட்டுரையில் பௌத்தம் குறித்த விரிவான பார்வை அருமை. உண்மையை உரத்துச் சொல்லியிருக்கின்றார் நஸ்ரத் ரோஸி. நலம் விசாரித்தலை நற்செயலாக இஸ்லாம் அறிவித்திருப்பது அதன் விசாலமான பார்வையைக் காட்டுகிறது. பொறுமையும், மன்னிப்பும் மனித மாண்பின் அடிப்படைப் பண்புகள். எட்டுத் திக்கும் கல்வி பயனுள்ள தகவல்.

– ப.குருசாமி, தேனி

## தெளிவைத் தந்த கட்டுரை

திருப்பரங்குன்றப் பிரச்னையின் உண்மை நிலை அறியாமல் குழம்பிக் கொண்டிருந்த எனக்கு சேயன் இப்ராகிம் எழுதிய கட்டுரை தெளிவைத் தந்தது. தமிழ்நாடு அரசு குன்று போல் நியாயத்தின் பக்கம் நிற்பது இந்தியாவுக்கே எடுத்துக்காட்டாக உள்ளது. ஒன்றிய அரசு திமுக அரசை ஒழித்து விட ஏன் துடிக்கிறது என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல் திருப்பரங்குன்றம் தீபப் பிரச்னை வெட்டவெளிச்சமாக்கி விட்டது.

வகுப்பு வெறியர்களிடமிருந்து ஆன்மிகத்தைக் காப்பாற்ற வேண்டும் என்கிற தலையங்கத்தின் வார்த்தை லட்சத்தில் ஒன்றாகும். அரசுப் பள்ளியில் படிப்பவர்களும் சாதிக்கலாம் என்பதற்கு அனஸ் சிறந்த எடுத்துக்காட்டு. வாழ்த்துகள்.

– S.A. சபீர் அஹ்மத்,
ஆணைக்காரன்சத்திரம்

## நீதித்துறையிலும் அரசியல்

**தி**ருப்பரங்குன்றத் தீபப் பிரச்னை பொய்யும் மெய்யும் கட்டுரை விரிவாக இந்தப் பிரச்னையை எடுத்துக் காட்டியது. எல்லாப் பிரச்னைகளிலும் அரசியல் புகுந்து விளையாடுகிறது. சிலநேரங்களில் அது மதப் பிரச்னையாக்கப்படுகின்றது. நீதித்துறையிலும் அரசியல் நுழைந்து விட்டது. கடைசிப் பக்கச் சேதி நான் முதல்வன் திட்டத்தில் சாதனை செய்த மாணவன் முகம்மது அனஸ் பாராட்டுக்குரியவர்.

– கவிஞர் கடல் நாகராஜன், கடலூர்

## ஆறுதல் அளிக்கும் நலவிசாரிப்பு

**தி**ருப்பரங்குன்ற விவகாரத்தில் ஆண்டாண்டு கால நடைமுறையை மாற்றுவதற்கு முனைபவர்களின் பக்கம் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் நிற்பது நீதிக்குப் புறம்பானது. பொறுமை கட்டுரை அருமை. நோயாளிகளை நலம் விசாரித்து நாம் கூறும் ஆறுதல் வார்த்தைகள் அவர்களுக்கு பெரும் நம்பிக்கையைத் தரும். இதன் மூலம் நட்பும் உறவும் மேம்படும்.

– எம்.எஸ்.ஃபாரூக், திருப்பாலத்துறை

## தனித்து விளங்கும் சமரசம்

**து**ணிவுடன் எழுதப்படும் தலையங்கங்கள், ஆதாரத்துடன் செய்திகள், விரிவான அலசல், வரலாறு, அரசியல், மார்க்கம் எனப் பல தரவுகளுடன் சமரசம் முழுமையான இதழாக, முற்றிலும் மாறுபட்ட இதழாகத் திகழ்கிறது. வலைதளங்களின் பிடியிலிருந்து மீட்டு வாசிப்பின் பக்கம் என்னைத் திருப்பியது சமரசம் இதழே! எல்லா இல்லங்களிலும், பள்ளிகளிலும், நூலகங்களிலும், கல்வி நிலையங்களிலும் இருக்க வேண்டிய இதழ் சமரசம்.

– A.Z. ரபீக் அஹ்மத், ஆம்பூர்

## தெளிவு, எளிமை, நேர்மை

**தி**ருப்பரங்குன்ற விவகாரத்தை மிகத் தெளிவாக எளிமையாக அதே நேரம் மிக உண்மையாக எடுத்துரைத்த சேயன் இப்ராஹீமுக்கு பாராட்டுகள். இரயில் பயணங்களில் வடமாநிலத்தவரின் தொல்லைகளை ஜெய்லானி சிறப்பாகப் பதிவு செய்துள்ளார். சிறுபான்மையினரின் உரிமைகள் குறித்து ஏராளமான தகவல்களை கப்ளிசேட் வழங்கியுள்ளார்.

– S.அஜிதா, M.லைலாம்மா, S.மகுதனன், தேனி

## உப்புச் சப்பற்ற விவாதம்

**தி**ருப்பரங்குன்றத் தீபப் பிரச்னையில் நீதிபதி சுவாமிநாதனின் தீர்ப்பு ஒருதலைப் பட்சமானது. உரிய பயணச்சீட்டு இல்லாமல் ரயிலில் பயணம் செய்யும் போக்கு தவறானது. உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். தோழர் வெங்கடேசன் நாடாளுமன்ற அவையில் உரத்து முழங்கியிருக்கின்றார். மிக அருமை. சையத் சஆதத்துல்லாஹ் அவர்கள் கூறியது போல் வந்தே மாதரம் உப்புச்சப்பற்ற விவாதம். கால, பொருள் விரயம் செய்வதற்கா நாடாளுமன்றம்?

– இரா. சண்முகவேல், கீழக்கலங்கல்

## உப்புச் சப்பற்ற விவாதம்

**சி**றுபான்மையினரின் உரிமைகள் கட்டுரை வாசித்தேன். டிசம்பர் 18 சிறுபான்மையினர் உரிமைகள் தினத்தை பெரும்பான்மையினர்தான் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த நாடு எல்லாருக்குமானது. எல்லாரும் சகோதரர்கள். இறைவனும், இறைத்தூதரும் இத்தகைய சமத்துவ, சகோதரத்துவத்தையே போதித்துள்ளார்கள்.

– ப. பீர் இலாஹி, உத்தமபாளையம்

## ரசித்து வாசித்தேன்

**அ**ண்டை வீட்டார் சிறப்பிதழ் குறித்து ஆசிரியருக்கு எழுதப்பட்ட கடிதங்கள் அனைத்தும் முத்திரைக் கடிதங்கள். அதில் பெரும்பாலான கடிதங்கள் சகோதரச் சமுதாயத்தவர்கள் எழுதி பதிவானதை மிகவும் ரசித்து வாசித்தேன். மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் அவர்களின் 'வந்தே மாதரம்' பற்றிய நாடாளுமன்ற உரை 'நச்'சென்றிருந்தது.

– ப.சையத் அஹ்மத், துளசேந்திரபுரம்


2026
49th CHENNAI BOOK FAIR
சென்னை புத்தகக் காட்சி
ரஹ்மத் பதிப்பகம்
RAHMATH PATHIPAGAM
அரங்கம் எண் : 134 & 135 | நுழைவாயில் : 03
08th JAN - 21st JAN, 2026
நந்தனம் YMCA மைதானம்
தொடர்புக்கு : +91 94440 25000 | +91 44 2499 7373

சரம் : 46
மலர் : 15

وَقُولُوا قَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

ஹிஜ்ரி 1447 ரஜப் 25 - ஷாபான் 11 • 2026 ஜனவரி 16-31

# வளர் இளம் தலைமுறையை என்ன செய்யப்போகிறோம்?

ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த சுராஜ் டிசம்பர் 27ஆம் தேதி சென்னையில் இருந்து திருப்பதி செல்லும் ரயிலில் பயணம் செய்தார். 17 வயதுடைய நான்கு சிறுவர்கள் பட்டாக் கத்திகளுடன் ஏறி ரயில் கதவின் அருகில் அமர்ந்திருந்த சுராஜை வம்பிழுத்து பட்டாக் கத்தியால் குத்துவது, வெட்டுவது போல் படமெடுத்து சமூக வலைதளத்தில் ரீல்ஸ் வெளியிட்டனர். திருத்தணி ரயில் நிலையம் வந்ததும், சுராஜை ரயிலில் இருந்து கீழே இறக்கி வெளிப்புறப் பகுதிக்கு இழுத்துச் சென்று அடித்து கை, கால், தலை, முகம் என பல்வேறு இடங்களில் சரமாரியாக வெட்டி அதையும் படமெடுத்து வெளியிட்டனர்.

நான்கு கயவர்களும் கைது செய்யப்பட்டு BNS 109ஆவது சட்டப்பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்து செங்கல்பட்டு கூர்நோக்கு இல்லத்தில் அடைக்கப்பட்டனர். ஒருவர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார். போதை தலைக்கேறி இத்தகைய வெறித்தனத்தில் சிறார்கள் ஈடுபட்டதாகவும், வடமாநிலத்தவர்களுக்கு தமிழ்நாட்டில் பாதுகாப்பு இல்லை என்றும் பலரும் கூறிவந்த நிலையில் வடக்கு மண்டல ஐஜி அஸ்ரா கார்க், ‘தாக்குதல் நடத்தியவர்கள் போதையில் இல்லை எனவும், வடமாநிலத்தவர் என்பதால் அவர் தாக்கப்படவில்லை’ என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு நடந்த ஒருசில நாளில் பட்டுப்புடவை வியாபாரம் செய்யும் ஜமால் என்பவர் அதே திருத்தணி ரயில் நிலையத்தில் இரு இளைஞர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். இந்த இரு நிகழ்வுகளும் தமிழ்நாட்டின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிப்பவை. இந்த விவகாரத்தைக் கூடுதல் கவனத்துடன் அணுக வேண்டிய தேவை இருக்கின்றது.

வளர் இளம் பருவத்தினர் மது, போதைக்கு ஆளாவதுடன் வன்முறை வெறியாட்டங்களில் நாட்டம் கொண்டவர்களாகவும், அப்படிச் செய்வதை பெருமையாகக் கருதி ரீல்ஸ் வெளியிடுவதும் அதிகரித்து வருகின்றது. இந்தப் போக்கு தடுத்து நிறுத்தப்பட வேண்டும். வன்முறை, கொலை, பொதுவெளியில் அநாகரிகமாக நடப்பது ஹீரோயிசம் அல்ல அது இழிசெயல், தண்டனைக்குரிய செயல் என்பதையும் விளங்க வைக்க வேண்டும்.

சக மனிதனின் மீதான மாண்பும், மனித உயிர்களின் மீதான பெருமதியும் குறைந்து வருவதன் விளைவே இத்தகைய குற்றங்கள் பெருகுவதற்குக் காரணம். மதம், மொழி, இனம், மாநில வாரியான பிரிவினைவாதம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். வயதைக் காரணம் காட்டி கொடூர மிருக குணம் கொண்டவர்களைச் சிறார்கள் என விடுவிப்பதும், தண்டனையைக் குறைப்பதும் நியாயமான செயல் அல்ல. தவறு செய்தவர்கள் யாராக எந்த வயதினரானாலும் தண்டிக்கப்பட வேண்டும். கட்டற்ற வன்முறைக் காட்சிகள் மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

சீரழியும் இளம் தலைமுறையைக் காக்க மதுவிலக்கை உடனடியாக நடைமுறைப்படுத்துவதுடன் போதைப் பொருள் விற்பனையை முற்றிலும் தடுத்து நிறுத்த வேண்டும். பெற்றோர்கள், ஆசிரியர்கள், ஆட்சியாளர்கள் என எல்லாருக்கும் இதில் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. வளர் இளம் தலைமுறையை ஒழுக்க நெறியில் வார்த்தெடுக்க முழுக் கவனமும், முயற்சியும் மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் அறம் சார்ந்த ஒழுக்கம் மிகுந்த எதிர்காலம் பெரும் சிக்கலுக்கும் நெருக்கடிக்கும் உள்ளாகிவிடும்.



அவள் பெயர் தமிழரசி, விழித்திரு ஆகிய இரு படங்களின் மூலம் பெரும் கவனத்தைப் பெற்றவரும், தமிழ்ச் சினிமாவின் சிறந்த இயக்குநர்களில் ஒருவருமான இயக்குநர் மீரா கதிரவன் பெரு மலையைக் கட்டி இழுக்கும் சவாலான பணியான இஸ்லாமிய வாழ்வியலைத் திரையில் கொண்டுவர தம்மையே தத்தம் செய்து கொண்டு ஹபீபியை வெற்றிகரமாக உருவாக்கி முடித்திருக்கின்றார். நேசம் எண்டர்டெய்ன்மெண்ட், கிரசெண்ட் சினி கிரியேசன் இணைந்து தயாரிக்கும் ஹபீபி விரைவில் திரைக்கு வர இருக்கும் சூழலில் வெளியீட்டுப் பணிகளில் தீவிரமாய் இயங்கிக் கொண்டிருந்த இயக்குநர் மீரா கதிரவனை சமரசம் இதழுக்காகச் சந்தித்தோம்.

# ஹபீபி நூறாண்டுகளாகப் பேசப்படாத வாழ்க்கை

## மனம் திறக்கிறார் இயக்குநர் **மீரா கதிரவன்**

சந்திப்பு: **நாகூர் ரிஸ்வான்**

- **நூறாண்டுகால தமிழ்ச் சினிமாவில் பேசத் தயங்கும் கருப்பொருளான இஸ்லாமிய வாழ்வியல் குறித்துப் பேசத் துணிந்தீர்களே எப்படி?**

எப்போதுமே எளிய மக்களுடனும் பதிவு செய்யப்படாத மனிதர்களுடனும் நின்று அவர்களுக்கான வாழ்வியலைப் பேச வேண்டும் என்பதை நான் விருப்பமாகக் கொண்டிருக்கின்றேன். அந்த வகையில் இயக்குநர்கள் எல்லாருக்குமே முன்னோடிகளாக தோல்ப்பாவைக் கலைஞர்கள் இருக்கின்றார்கள். திரையில் கதை சொல்லும் இந்த நவீன வடிவத்திற்கு முதல் மூல காரணிகளாகத் திகழும் தோல்ப்பாவைக் கலைஞர்களைப் பற்றிய ஒரு பதிவுகூட இல்லையே என்ற வருத்தம் எனக்கு இருந்தது.

மற்ற மொழிகளில் நாட்டுப்புறக் கலைகளை வைத்து சினிமா வருவதைப் போல் தமிழ் மொழியில் அவ்வளவு அதிகமாக சினிமா வருவதில்லையே என்ற ஏக்கம் எனக்கு இருந்தது. அந்த வகையிலும் நாட்டுப் புறக் கலையை மையமாக வைத்து சினிமா உருவாக்க வேண்டும் என்கின்ற அடிப்படையிலும் ஒரு சினிமா கலைஞனாக திரையில் கதை சொல்லும் ஒரு நவீன கதை சொல்லிகளுக்கு மூதாதையர்களான தோல்ப்பாவைக் கலைஞர்களைப் பதிவு செய்யும் நோக்கத்தில்தான் அவள் பெயர் தமிழரசி திரைப் படத்தை உருவாக்கினேன்.

எனது இரண்டாவது திரைப்படமான விழித்திரு ஒரே இரவில் நடக்கும் முழுமையான திரைப்படம். சென்னை போன்ற பெருநகரங்களில் எளிய மனிதர்களைக் கழித்துவிட்டால் சென்னை என்பதே இல்லை. எளிய மனிதர்கள் பகலில் எப்படி பெரு நகரங்களின் ஆன்மாவாக இருக்கின்றார்களோ அதைப் போல் இரவு நேரங்களிலும் எளிய மனிதர்களின் உலகம் இருக்கிறது. இதுவரை கண்டிராத, கேட்டிராத எத்தனையோ கதைகளை பெருநகர இரவு கொண்டிருக்கின்றது. அவர்களின் கதையும் சினிமாவில் பதிவு செய்யப்படாத ஒரு சூழலில் அப்படி ஒரு முயற்சியைச் செய்ய வேண்டும் என்று விரும்பினேன். விழித்திரு உருவானது.

அதுபோல் நூற்றாண்டு காலமாக தமிழ்ச் சினிமாவில் பதிவு செய்யப்படாத இஸ்லாமியர்களைக் குறித்த ஒரு சினிமாவை உருவாக்க வேண்டும் என்கிற ஆவல்



எனக்கு நீண்ட காலமாகவே இருந்தது. கூடுதலாக சமகால அரசியலில் இஸ்லாமியர்கள் குறித்தான வெறுப்பரசியல் கட்டமைக்கப்பட்டு இஸ்லாமியர்கள் குறித்த தவறான புரிதல்களை உருவாக்கும் பெரிய திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இன்றைய காலத்தில் இஸ்லாமியர்கள் அடையாள ரீதியாகவும் தனிமைப்படுத்தப்படுவதைக் குறித்த கவலையும் அவர்களுக்கு நிகழும் பலவிதமான கொடுமைகளைக் காண்பதால் உருவாகும் கவலையின் காரணமாகவும் இஸ்லாமியர்களைத் தவறாகக் கட்டமைக்கும் நரேட்டிவ் உருவாக்கப்படும் சூழலில் இஸ்லாமியர்கள் குறித்த உண்மையான வாழ்வியலைப் பதிவு செய்யும் நோக்கிலேயே ஹபீபி உருவானது.

தமிழ்ச் சினிமாவில் ஒடுக்கப்பட்டவர்களின் அரசியல், பழங்குடிகளின் அரசியல், பெண்களுக்கான படங்கள், திருநங்கைகள், விளிம்புநிலை மக்கள், குழந்தைகளுக்கான படங்கள் கணிசமான அளவில் வெளிவந்துள்ளன. ஆனால் இஸ்லாமியர்களின் அசலான, இயல்பான வாழ்வு பதிவாகவில்லை என்ற கவலையிலும், இதற்கு முன் தமிழ்ச் சினிமாவில் முதலீட்டாளர்களாக, நடிகர்களாக, தயாரிப்பாளர்களாக, இயக்குநர்களாக, தொழில்நுட்ப வல்லுநர்களாக இஸ்லாமியர்கள் பலர் இருந்தும் இந்தப் பதிவு நடைபெறவில்லையே என்ற வேதனையிலும் ஹபீபி திரைப்படத்தை உருவாக்கினேன்.

- **இந்தக் கதையும், களமும் உருவான விதம் குறித்துச் சொல்லுங்களேன்!**

கடந்த 20 ஆண்டுகளாகவே இஸ்லாமிய வாழ்வியலை உருவாக்க முயற்சி மேற்கொள்ளும் போது நான் வாசித்த, நான் பார்த்த மனிதர்களின் கதைகளைக் குறிப்புகளாக நான் எழுதி வைப்பது உண்டு. நீண்ட நாள் நண்பரும், எழுத்தாளரும், சமரசம் இதழின் பொறுப்பாசிரியருமான வி.எஸ்.முஹம்மத் அமீன் தொடர்ச்சியாக திரைப் படங்கள் குறித்தும், சமூகம் குறித்தும் விவாதிப்பது உண்டு. அப்படியொரு நாள் நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது தமிழ்ச் சினிமாவில் இஸ்லாமிய சினிமாவிற்கான தேவை குறித்தும், இடம் குறித்தும் நீண்ட விவாதம் செய்தோம். என்னுடைய, அவருடைய அனுபவங்கள் அப்படியாக சிறுகதைகள், நாவல்கள், திரைப்படங்கள் குறித்து விவாதிக்கும் போது அமீன் அவருடைய 'பதிவு செய்யப்படாத மனிதர்கள்' சிறுகதைத் தொகுப்பிலுள்ள நெய்தல் என்ற கதையைப் பேசினார். எனக்கு அந்தக் கதை பிடித்திருந்தது.



இஸ்லாத்தைத் தங்களுடைய வாழ்க்கையாக, மார்க்கமாக ஏற்றுக் கொண்டு இந்தியா போன்ற பல்வேறு நிலப்பரப்புகளைக் கொண்ட நாட்டில் வாழும் எல்லா இஸ்லாமியர்களுக்கும் ஒவ்வொரு கதைகள் இருக்கின்றன. எல்லாருமே இஸ்லாமியர்களாக இருந்தாலும் அவர்களின் வாழ்வியல் முறை நிலப்பரப்பின் அடிப்படையில் வெவ்வேறான வகையில் இருக்கிறது. அது எந்த மதத்திற்கும் இல்லாத ஒரு சிறப்பாகப் பார்க்கிறேன். அப்படி தென்பகுதியிலுள்ள தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட இஸ்லாமியர்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள் என்ற செய்தி பலருக்கும் தெரியாத ஒன்றாகும். மற்ற சமூக மக்கள் கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பதை அறிந்திருக்கலாம். ஆனால் இஸ்லாமியர்கள் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள் என்ற செய்தி பலரும் அறிந்திடாத ஒன்று.

எல்லா சமூக மக்களும் நீண்டகால பாரம்பரியமிக்க தங்களுடைய தொழிலை இயந்திரமயமாக்கலுக்குப் பிறகு விட்டுவிட்டு தங்களுடைய சொந்த நிலத்திலிருந்து பிழைப்புத் தேடி வெளியேறிச் சென்றுள்ளார்கள். இந்தப் புலம் பெயர்தல் எல்லாச் சமூகத்திலும் அந்தக் காலகட்டத்தில் நிகழ்ந்திருக்கிறது. அதுபோல இஸ்லாமி

யர்களின் வாழ்வில் 70,80 கால கட்டங்களில் தலைமுறையாக தங்களுடைய நிலத்தில் செய்து வந்த தொழிலை விட்டுவிட்டு வெளியேறும் நிலையின் வலியைக் குறித்தும் நாங்கள் பேசினோம்.

நான் 1979 இறுதியில் பிறந்தவன். அப்போது வெளிநாடு சென்று வருபவர்களைப் பார்த்து வளர்ந்தவன். என்னுடைய தந்தை தலைமை ஆசிரியராக இருந்தாலும் கூட என் குடும்பத்திலுள்ள சாச்சா, மாமா, அண்ணன், உறவுகள் வெளிநாட்டுக்குச் சென்று வரும் அனுபவங்களை நான் நேரடியாகப் பார்த்திருக்கின்றேன். ஒரு பயணம்



என்பது பொருளீட்டுவதற்காக வெளியேறிச் செல்கின்றவர்களின் கதை மட்டுமில்லை. அவர்களை வழியனுப்புகின்ற, அவர்களுக்காகக் காத்திருக்கின்ற மனிதர்களின் கதையாகவும் இருக்கின்றது.

இதுவரை வெளிநாட்டைக் குறித்து வந்த படங்கள் எல்லாமே அரபு நாடு, ஒட்டகம், பாலைவனம், விமானம் என்றுதான் பதிவாகி வந்திருக்கிறது. ஆனால் முழுக்க முழுக்க வெளிநாட்டிற்கு பிழைப்பு தேடிச் செல்லக்கூடிய இடம்பெயர்வு என்பது ஒரு குடும்பத்திற்குள், உறவுகளுக்குள், ஊருக்குள், அந்த சமூகத்திற்குள் எந்த மாதிரியான செல்வாக்கைச் செலுத்துகிறது என்பதற்கான கதையை வெளிநாட்டிற்குச் செல்லாமல் இங்கிருந்தே பேசக்கூடிய ஒரு கதையாக அமீன் அதைச் சொல்லும்போது மிக மகிழ்வாக இருந்தது.

நான் இந்த வாழ்வை நெருக்கமாகப் பார்த்திருக்கின்றேன் என்பதால் இந்த வாழ்வை உயிர்ப்பாகவும், ஈரமாகவும் அப்படியே கொண்டுவர முடியும் என்று நம்பிக்கை உருவானது. நானும் நண்பர் அமீனும் இந்தக் கதை நடக்கக் கூடிய பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதாலும் அவருடைய குடும்பம் பாரம்பரியமான நெசவுத் தொழிலைச் செய்து கொண்டிருந்ததாலும் இந்த வாழ்வை இரத்தமும், சதையுமாகக் கொண்டுவர முடியும் என இருவரும் பேசி இந்தக் கதையைத் தேர்வு செய்யலாம் என்று முடிவு செய்தோம்.

படம் பார்ப்பவர்களுக்கு ஒரு திரைப்படம் பார்க்கிறோம் என்பது இல்லாமல் ஒரு சில நிமிடங்களிலேயே இந்தப் படம் இஸ்லாமிய தெருக்களுக்குள்ளாக, வீடுகளுக்கு உள்ளாகக் கொண்டுவந்து இந்தப் படம் பார்க்கும் பார்வையாளர்களைக் கதையில் ஓர் அங்கமாக மாற்றக்கூடிய அளவிற்கான தன்மையோடு இரத்தமும், சதையுமாக, உயிர்ப்பாக அமீன் இந்தக் கதையை எழுதியிருக்கின்றார். ஒரு கட்டத்தில் பார்வையாளர்களே மனதிலிருந்து இந்தக் கதையை நகர்த்துவதற்கு வந்து சேரக் கூடிய அளவிற்கு இந்தப் படம் நம்பகத் தன்மையோடு உருவாகி இருக்கிறது. இப்படித்தான் ஹபீபியின் கதையைத் தேர்வு செய்தோம். இஸ்லாமியர்களின் வாழ்வு என்பது எவ்வளவு தூரம் இந்த மண்ணோடு பின்னிப் பிணைந்திருக்கின்றது என்ற கதையாகவும் இது உருவாகியிருக்கிறது.

### ■ படத்திற்கு ஹபீபி என அரபு மொழித் தலைப்பு வைத்திருக்கின்றீர்களே..!

உலகம் முழுவதும் 200 கோடிக்கும் அதிகமாக இஸ்லாமியர்கள் இருக்கின்றார்கள். அதில் பெரும்பான்மையான மக்கள் இன்று காட்சி ஊடகங்களைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டார்கள். வாழ்வு முறை வேறு வேறாக இருந்தாலும் மார்க்கத்தின் அடிப்படையில் உலகம் முழுவதும் இருக்கின்ற இஸ்லாமியர்கள் உணர்வு ரீதியாக ஒன்றாகத்தான் இருக்கின்றார்கள். அவர்கள் அனைவரையும் ஒன்றிணைக்கக் கூடிய புள்ளியாக இஸ்லாமிய கொள்கை, நம்பிக்கைகள் இருக்கின்றது. இஸ்லாமியப் பின்புலத்திலான வாழ்வு என்பது உலகம் முழுவதும் இருக்கின்ற முஸ்லிம்களை இணைக்கின்ற

ஒரு கதையாக மாறிவிடுகிறது. ஒரு தமிழ்ப்படம் தெலுங்கு, மலையாளம் போன்ற இந்திய மொழிகள் வரை செல்லும். இங்கிருக்கும் மற்ற சமூகத்தவர்களின் கதை என்பது குறிப்பிட்ட எல்லைகள் வரைதான் இருக்கும்.

ஆனால் ஓர் இஸ்லாமிய வாழ்வு என்பது, வாழ்வியலைச் சொல்லும் சினிமா என்பது உலகம் முழுவதும் இருக்கும் இஸ்லாமியர்களை இணைக்கும் என்பதனால் ஹபீபி என்கிற தலைப்பைச் சூட்டியிருக்கின்றோம். வணிக ரீதியாகவும் இந்தியாவைத் தாண்டி ஹபீபியை வெளியே கொண்டு செல்ல விரும்புகின்றோம். உலகம் முழுவதும் வாழும் முஸ்லிம்களும், முஸ்லிம் அல்லாதவர்களும் பார்க்க வேண்டும் என்பதால் ஹபீபி என்ற தலைப்பு தேவைப்பட்டது.

- **பெரிய நடிகர்கள் இல்லாமல் படம் வெற்றி பெற முடியுமா? புதுமுக நடிகர்களுடன் களமிறங்கியுள்ளீர்கள். இந்த அனுபவம் எப்படி இருந்தது?**

உச்சத்தில் இருக்கின்ற நடிகர்கள் என்றில்லாமல் ஓரளவு பிரபல்யமான நடிகர்கள் சிலரை ஹபீபிக்காக அணுகியபோது அவர்கள் நடிக்கத் தயாராக இல்லை. அவர்கள் எல்லாருக்கும் ஒரு தயக்கம் இருந்தது. இந்தக் கதை மூன்று காலகட்டத்தில் நடப்பதால் ஒரு நீண்ட காத்திருத்தலுடனான பயணம் தேவைப்பட்டது. உடல் ரீதியாக, மன ரீதியாக மற்ற படங்களை விட்டு விட்டு வர வேண்டும். ஹபீபி படம் பார்க்கும்போது நீங்களும் அதை உணர்வீர்கள். ஒவ்வொரு பருவத்திற்கும் அவர்களின் தோற்றம் மாறுவது மிகச் சிறப்பாக வந்திருக்கிறது. ஒரு நீண்ட நெடிய உழைப்பை, காலத்தை இந்தப் படம் கோரியது.

சிலர் ஹபீபி இஸ்லாமியப் படம் என்பதால் போனைக் கூட எடுப்பதில்லை. இஸ்லாமிய சினிமா உருவாக்கத்திற்குப் பின்னால் உள்ள பிரச்னைகளையும், அசாத்தியங்களையும், கடினமான சவால்களையும் பேசுவதன் வழியாகத்தான் சமகாலத்தில் கலைப் பண்பாட்டுத் தளத்தில், இஸ்லாமியர்களுக்கான இடம் என்னவாக இருக்கிறது, அரசியல் ரீதியாக இஸ்லாமியர்களுக்கான இடம் என்னவாக இருக்கிறது என்பதை மக்கள் புரிந்து கொள்ள முடியும்.

அச்சு அசலாக ஒரு வாழ்க்கையைக் கண்முன்னால் கொண்டு வந்து நிறுத்துவதற்கு ஏற்கனவே ஒரு இமேஜ் இருக்கக்கூடிய பெரிய நடிகர்கள் நடிகர்களாக மட்டுமே பார்க்கப்படுவார்கள். ஆனால் புதுமுகங்கள் அந்தப் பாத்திரங்களாகவே பார்க்கப்படுவார்கள். அப்படிப் பார்க்கப்படும்போது ஈரம் நிறைந்த அசலான வாழ்க்கையைப் பார்வையாளர்கள் உணர முடியும். நாம் பார்ப்பது ஒரு சினிமா அல்ல. ஒரு குடும்பத்தின் கதை. ஒரு தெருவுக்குள், வீட்டிற்குள் நம்மை அழைத்துச் செல்கின்ற ஓர் அனுபவம் என்பதை உணர வேண்டும் என்றால் அதற்கு இமேஜ் இல்லாத புதுமுகங்கள் எங்களுக்குத் தேவைப்பட்டது.

படத்தினுடைய ஒரிஜினாலிட்டிக்காக, வாழ்விற்காக அந்த ஊரைச் சேர்ந்த மக்களை நிறைய பயன்படுத்தியிருக்கின்றோம். அதாவது சினிமாவில் எந்த முன் அனுபவமும் இல்லாத, கேமராவிற்கு முகம் காட்டிடாத, சினிமா என்னவென்று தெரியாத பலரை நாங்கள் நடிக்க வைத்திருக்கின்றோம். அதுவெல்லாம் படத்தை மிக உயிர்ப்பாகக் கொண்டு வந்திருக்கிறது. அவர்களுக்குப் பழக்கப்படாத ஓர் உலகத்தில் அவர்களைக் கொண்டு வருவதில் பெரும் சவால்கள் இருந்தன. நடிக்க வைப்பதில் மட்டுமல்ல, டப்பிங் பேச வைப்பதில் பெரும் காலத்தையும் எடுத்துக் கொண்டது. அது பொருளாதார ரீதியாகவுமே கூடுதல் செலவும் தேவைப்பட்டது. அதைத் தயாரிப்பாளர்கள் புரிந்து

> ஒரு திரைப்படம் பார்க்கிறோம் என்பது இல்லாமல் ஒரு சில நிமிடங்களிலேயே இந்தப் படம் இஸ்லாமிய தெருக்களுக்குள்ளாக, வீடுகளுக்கு உள்ளாகக் கொண்டுவந்து இந்தப் படம் பார்க்கும் பார்வையாளர்களைக் கதையில் ஓர் அங்கமாக மாற்றக்கூடிய அளவிற்கான தன்மையோடு இரத்தமும், சதையுமாக, உயிர்ப்பாக ஹபீபி உருவாகி இருக்கிறது







கொண்டதனால் அருகிலிருந்து பார்க்கும் போது அதற்கு ஒத்துழைத்தார்கள்.

நிறைய நடிகர்கள் ஹபீபி ஸ்கூல் மூலமாக தமிழ் சினிமாவுக்குக் கிடைப்பார்கள். தங்களின் வாழ்வை அந்த மக்கள் அவர்களாகவே வாழ்ந்திருக்கின்றார்கள். குறிப்பாக கஸ்தூரி ராஜா அவர்களின் முதல் படம் வரும்போது நான் அந்த ஊரில் கோலி விளையாடிக் கொண்டிருந்த சிறுவனாக இருந்திருப்பேன். ஒரு மூத்த இயக்குநரை நான் இயக்கியது பெரிய அனுபவமாக இருந்தது. அவர் ஒரு தேர்ந்த இயக்குநர், கதை சொல்லி என்பதால் எளிதில் இந்த கதாபாத்திரத்தை உள்வாங்கி அந்தக் கதாபாத்திரத்திற்கு எவ்வளவு தேவையோ அதற்கான பங்களிப்பைச் சிறப்பாகச் செய்திருக்கின்றார்.

ஒரு சிறந்த இயக்குநராக எப்படி அறியப்பட்டாரோ, அதுபோல ஒரு சிறந்த நடிகராகவும் அறியப்படுவார். இதில் பெரும்பாலும் நடித்தவர்கள் முஸ்லிம் அல்லாதவர்கள்தான். ஆனால் படம் பார்க்கும்போது அவர்களின் உடல்மொழி, தோற்றத்தில், வசன உச்சரிப்பில் அந்தப் பகுதி முஸ்லிமாகவே வாழ்ந்திருக்கின்றார்கள். தொழில்நுட்பக் கலைஞர்களாகவும், நடிகர்களாகவும் முஸ்லிம் அல்லாதவர்கள் பெருமளவு இருந்திருக்கின்றார்கள் என்பதுதான் இந்தப் படத்தினுடைய ஒரு சாதனையாகவும், நம்பிக்கையாகவும் பார்க்கிறேன். அனைவரும் தங்கள் மனதிலிருந்து ஒத்துழைப்புக் கொடுத்திருக்கின்றார்கள்.

> இஸ்லாமிய சினிமா உருவாக்கத்திற்குப் பின்னால் உள்ள பிரச்னைகளையும், அசாத்தியங்களையும், கடினமான சவால்களையும் பேசுவதன் வழியாகத்தான் சமகாலத்தில் கலைப் பண்பாட்டுத் தளத்தில், இஸ்லாமியர்களுக்கான இடம் என்னவாக இருக்கிறது, அரசியல் ரீதியாக இஸ்லாமியர்களுக்கான இடம் என்னவாக இருக்கிறது என்பதை மக்கள் புரிந்து கொள்ள முடியும்.

அரசியலாகவும் சமூகத்திற்குச் செய்தியாகவும் சொல்ல விரும்புகின்றேன்.

### ■ வணிக சினிமா ஆதிக்கம் செலுத்தும் நிலையில், கலைப்படங்களுக்கு, எளிய மக்கள் வாழ்வியல் படங்களுக்கு வரவேற்பு கிடைக்குமா?

இந்திய மொழிகளில் சினிமாவை மிகவும் ஆதர்சமாக, உயிராகக் கருதக்கூடிய ரசிகர்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றார்கள். இங்கு உருவாகியிருக்கக் கூடிய எவ்வளவோ படங்களில் புதுமுகங்கள் நிறைய இருந்து படம் ஓடியிருக்கிறது. வியாபார ரீதியாக திரையரங்கிற்குப் படத்தைக் கொண்டு வருவதற்கு சிரமம் இருப்பதை மறுப்பதற்கில்லை. ரசிகர்களைப் படம் பார்க்க வர வைப்பது வரை இந்தச் சிரமம் இருக்கிறது. பெரிய நடிகர்கள் இருந்தால் இதுவெல்லாம் எளிதில் நடந்துவிடும்.

திரையரங்கிற்கு மக்கள் வந்து பார்த்துவிட்டால் அந்தக் கதை அவர்களின் மனதுக்கு நெருக்கமாக இருக்கின்றதா, நம்பகத்தன்மையோடு இருக்கின்றதா, ஏற்றுக்கொள்ளும் வகையில் இருக்கின்றதா, படம் முழுமையாகத் தம்மைத் திருப்திப்படுத்துகின்றதா என்றுதான் பார்ப்பார்களே தவிர நடிகர்களுக்காக மட்டுமே படத்தைப் பார்ப்பதில்லை. அண்மைக் காலத்தில் உச்ச நடிகர்கள் நடித்த படங்கள் படுதோல்வி அடைந்ததையும் நாம் பார்க்கின்றோம்.

வணிக ரீதியான சவால்கள் இந்தப் படத்திற்கு இருக்கிறது. ஆனால் ரசிகர்கள் அப்படி இல்லை. மனதைத் தொடுகின்ற கதைகளை அவர்கள் பார்க்கின்றார்கள். டி.வி, அலைப்பேசியில் ஏதோ ஒரு வகையில் நாளுக்கு மூன்று படம் என்ற ரீதியில் வாரத்திற்கு இருபது படம் முழுமையாகவோ, மேலோட்டமாகவோ பார்க்கின்றார்கள். 21 ஆவது சினிமாவாக புதிய செய்தியையும், புதிய அனுபவத்தையும் உணர்வுகளையும் எதிர்பார்க்கின்றார்கள். அப்படியான புதிய அனுபவத்தைத் தருகின்ற படங்களை மக்கள் கைவிட்டதாக இங்கு வரலாறே இல்லை. மாபெரும் வெற்றிப்படமாக அதை மாற்றி விடுவார்கள். அண்மைக்காலமாக அதற்கான உதாரணங்களாக நிறையப் படங்களைச் சொல்ல முடியும். எனவே ஹபீபி வணிக ரீதியாகவும் பெரும் வெற்றியைப் பெறும் என்பது எங்கள் நம்பிக்கை.



- **ஹபீபி வெகுமக்களிடம் சென்றடையும் என நம்புகிறீர்களா?**

வெகுமக்கள் என்பதெல்லாம் ஒன்றுமில்லை. நல்ல சினிமா பார்ப்பவர்கள், பார்க்காதவர்கள் இருக்கின்றார்கள். இது நூறாண்டுகளாகப் பேசப்படாத வாழ்க்கை. இங்கிருக்கக்கூடிய பெரும்பான்மையான இந்துக்கள், பிற மதங்களைச் சார்ந்தவர்கள் தினமும் தங்களைச் சுற்றியிருக்கும் பள்ளிகளிலிருந்து பாங்குச் சப்தத்தைக் கேட்டிருப்பார்கள். தாங்கள் பணி செய்யும் இடங்களிலோ, வசிப்பிடங்களிலோ, பயணங்களிலோ, உணவகங்களிலோ இஸ்லாமியர்களை அன்றாடம் சந்தித்துக் கொண்டே இருக்கின்றார்கள். நண்பர்களாகவும் இருக்கின்றார்கள். ஐந்துபேரில் இரண்டு முஸ்லிம் நண்பர்கள் இருப்பார்கள். தங்களுடைய அண்டை வீட்டாராகிய, நண்பர்களாகிய முஸ்லிம்களின் கதை வரவில்லை என்ற ஏக்கம் அவர்களுக்கும் இருக்கின்றது.

இன்றிருக்கும் அரசியல் புற அழுத்தம் காரணமாகவும் இந்த மக்களுக்கான ஒரு படம் வர வேண்டும் என்று விரும்பக் கூடியவர்களாகவும், எந்தப் புதிய படம் வந்தாலும் பார்க்கும் இடத்திலும் அவர்கள் இருக்கின்றார்கள் என்பதுதான் உண்மை. நிச்சயம் இது எல்லா மக்களிடமும் சென்றடையும்.

பாடல்கள், பரபரப்பான காட்சிகள், மனதைத் தொடும் காதல் காட்சிகள் என இந்தப் படம் முழுவதுமே ஒரு மையநீரோட்டத்திற்கு உள்ளே இருந்து பேசுகிறது. குறிப்பிட்ட மக்களுக்கான படம் என்று இதனைச் சுருக்குவதை நான் விரும்பவில்லை. வணிக ரீதியான செயல்பாடாக இருந்தால் மட்டுமே இது தொடர் செயல்பாட்டிற்குள் வரும். அப்போதுதான் தொடர்ந்து பலரும் இதுபோன்ற படங்களை இயக்குவார்கள். எனவே இதை வெற்றிப்படமாக மாற்றுவதற்கான வணிக சினிமாவின் எல்லைகளுக்குள் நின்று, அதே வேளையில் மசாலாத்தனமான படமாக இல்லாமல் ஃபீல் குட் என்ற வகையில் தரமான படமாக உருவாக்கியிருக்கின்றோம். இதுவரை படம் பார்த்தவர்கள் இந்தப் படம் மிக நன்றாக இருக்கிறது. வணிக ரீதியாக வெற்றியடையும் என்று சொல்லியிருக்கின்றார்கள்.

உலகமயமாக்கலுக்குப் பிறகு மக்கள் ஒரே கலாச்சார, உணவு, பழக்க வழக்கங்கள் என்று திட்டமிட்டு சுருக்கப்படுகின்ற ஒரு காலகட்டத்தில் தங்களுடைய வேர்களைத் திரும்பித் தேடக்கூடிய மனிதர்களாகவும், தங்களுடைய மதிப்பீடுகளைத் திரும்பிப் பார்க்கக்கூடிய, மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கும் ஒரு காலமாக மாறியிருக்கிறது. நிச்சயமாக இந்தப் படம் வணிக ரீதியாக வெற்றியடையும், அதற்கான எல்லாத் தன்மைகளும் படத்தில் இருக்கிறது.

*(அடுத்த இதழில் நிறைவடையும்)*

# உலகப் பொருளாதாரமும் இஸ்லாமியப் பொருளாதாரமும்..!



- ஹர்சில் ஹலீம்

**ந**ம் அன்றாட வாழ்வில் வியாபாரத்திலும், வீட்டிலும், நாட்டிலும், பொருளாதார ரீதியாகப் பல்வேறு விதமான நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறோம். அதனால் ஏற்படுகின்ற விளைவுகள் பாரதூரமானவை. ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு வறுமை பெரும் தடையாக இருக்கிறது. வறுமையை ஒழிப்பது மிகப்பெரிய சவாலாக நம் முன் நிற்கிறது. பொருளாதார நெருக்கடிக்கான காரணம் என்ன? அதற்குத் தீர்வுதான் என்ன? நாட்டின் வறுமையை ஒழிப்பது சாத்தியமற்றதா? என்பன போன்ற கேள்விகளுக்கான விடை காண வேண்டியது அவசியம்.

## உலகப் பொருளாதாரம்

உலகப் பொருளாதாரத்தைப் பொறுத்த வரையில் பணத்தை எவ்வாறு சம்பாதிப்பது? சம்பாதித்த பணத்தை எவ்வாறு செலவழிப்பது? என்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. குறிப்பாக நுகர்வோர் என்ன விரும்புகிறார்? எதனால் அதை விரும்புகிறார்? (அதாவது குறைந்த செலவில் அதிக திருப்தி தரக்கூடிய பொருட்களையே விரும்புவார்) நாம் உற்பத்தி செய்த இந்தப் பொருளை எவ்வாறு கவர்ச்சிகரமான விளம்பரம் மூலம் சந்தைப்படுத்தி விற்கலாம்? நாம் உற்பத்தி செய்த பொருள் மீது மக்களுக்கு எவ்வாறு ஆசையைத் தூண்டி அந்தப் பொருளை வாங்க வைப்பது என்பன போன்ற பல உத்திகளை வகுத்து பொருளீட்டிக் கொள்வது உலகப் பொருளாதாரத்தின் ஓர் அங்கமாக இருக்கிறது.

உலகப் பொருளாதாரம் மூன்று நிலைகளை உள்ளடக்கியது. 1.முதலாளித்துவ பொருளாதார முறை 2. சமூக நல பொருளாதார முறை 3.கலப்பு பொருளாதார முறை

### *1. முதலாளித்துவ பொருளாதார முறை* (Capitalist Economic System)

முதலாளித்துவம்(Capitalism) என்பது பெரும்பாலும் தனிப்பட்டவர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் ஒரு முறையாகும். அத்துடன் இம் முறையில் முதலீடு, விநியோகம், வருமானம், உற்பத்தி, பொருள்களின் விலை, சேவைகள் என்பன சந்தைப் பொருளாதாரத்தினால் தீர்மானிக்கப்படுகின்றன.

லாபத்தை அடைய வேண்டும் என்ற நோக்கம் முதலாளித்துவத்தின் ஒரு கோட்பாடாகும். வணிகத்தின் இறுதி இலக்கு பணம் சம்பாதிக்க வேண்டும் என்று கூறுகிறது. தனிநபர்கள் தங்களின் சொந்த நலன்களைப் பெற முற்படுகின்ற தத்துவத்தின் மீது இலாப நோக்கமாகச் செயல்படுகிறது. அதன்படி,

வணிகங்கள் லாபத்தை அதிகரிப்பதன் மூலம் தங்களுக்கு அல்லது அவர்களது பங்குதாரர் களுக்கு நன்மை பயக்கின்றன.

முதலாளித்துவ பொருளாதாரம், சந்தை போட்டி என்பது விற்பனையாளர்களிடையே இலாப நோக்கங்கள், சந்தை பங்கு விற்பனை யின் அளவு ஆகியவற்றின் மாறுபாடுகளால் விற்பனை, தயாரிப்பு, விநியோகம், ஊக்கு விப்பு ஆகியவற்றின் மாறுபாடுகளால் இத்தகைய இலக்குகளை அடைய முயற் சிக்கின்றது. சந்தை செயல்முறை முழுவதும் போட்டி பரவலாக உள்ளது. பற்றாக் குறையிலிருந்து போட்டியிடும் முடிவுகள் அனைத்தும் மனிதத் தேவைகளையும் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை.

இந்த முதலாளித்துவ பொருளாதார முறையை அமெரிக்கா, இங்கிலாந்து, தென் கொரியா, ஆஸ்திரேலியா, கனடா, ஜெர்மனி, சுவிட்ஸர்லாந்து, ஹாங்காங், நியூசிலாந்து, அயர்லாந்து, டென்மார்க், நெதர்லாந்து போன்ற நாடுகள் பின்பற்றுகின்றன.

### நன்மைகள்

ஒன்றுக்கும் மேற்பட்ட வணிக நிறுவ னங்கள் ஒரே மாதிரியான பொருளை விற் பனை செய்யும் போது அவர்களுக்கிடையான போட்டி காரணமாக உற்பத்திப் பொருளின் விலை குறையும். பங்குச் சந்தை உயரும், லாபம் அதிகரிக்கும், வர்த்தகம் மேம்படும்.

### தீமைகள்

ஒரு நிறுவனத்தில் பணிபுரியும் தொழி லாளர், ஊழியர்களின் வேலைப் பளு அதிகரிக்கும். தொழிலாளர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டும், சமூக நலனைப் புறம் தள்ளி விட்டும், லாபத்திற்கு மட்டும் முன்னுரிமை அளிக்கப்படும்.

பணம் சிலரிடம் மட்டுமே குவியும். இதனால் ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு அதிகரிக்கும். இங்கு முதலீட்டாளர்கள் நலனை மட்டும் கருத்தில் கொள்வதால் சமூக நலன் பெரிதும் பாதிக்கப்படும். ஆகவே, இந்த முதலாளித்துவ பொருளாதார முறை அடிப்படையில் வறுமையை ஒழிப்பது அறவே சாத்தியமற்றது.

### 2 சமூகவுடைமை பொருளாதார முறை (Socialist Economic System)

சமூகவுடைமை(Socialism) என்பது ஓர் அரசியல் பொருளியல் கோட்பாடு. பொரு ளாதார நிர்வாகத்தில் அரசு பங்களிப்பை வலியுறுத்துகின்றது. முக்கியத் துறைகள் அரசு டமையாக இருப்பதையும், சமத்துவத்தை அல்லது சம வாய்ப்புகளை நிலை நிறுத்தும் கொள்கைகளையும், பொது பொருளாதார நீரோட்டத்தின் விளிம்பில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தர உயர்வுக்கு உதவும் வழி முறைகளையும் வலியுறுத்துகின்றது.

மேலும் சோசலிச சிந்தனைகள் பொது நலம், கூட்டுச் செயல்பாடு ஆகிவற்றை முன்நிறுத்தி, இலாப நோக்கத்தைக் கொண்டு இயங்கும் முதலாளித்துவக் கொள்கைகள், தனி நபர்களிடம் செல்வம் குவிதலை எதிர்த்து அமைகின்றன. தொழில் புரட்சி, முதலாளித் துவம் உருவாக்கிய ஏற்றத்தாழ்வுகளுக்குத் தீர்வாக சமவுடைமைக் கோட்பாடு முன்வைக் கப்பட்டது.

உற்பத்திக் காரணிகள் அரசு அல்லது சமூகக் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். அரசுடைமை நிறுவனங்கள் ஈட்டும் லாபம், ஒரு சிலரின் கைகளில் குவியாமல், மக்களுக் குச் சமமாகப் பகிரும் வழிகளாகும்.

இலாபத்தின் பங்கை நிறுவனத்தில் பணி புரியும் அனைவருக்கும் பகிர்ந்தளித்தல், இலாபத்தை பொதுநிதியாக(Public Finance) மக்கள் நலனுக்குப் பயன்படுத்துதல், இலாபத்தை சமூகப் பங்காக(Social Dividend) மக்களுக்கே நேரடியாகப் பகிர்ந்தளித்தல் போன்ற முறைகளை பரிந்துரைக்கின்றது. இந்த சமூக நல பொருளாதார முறையை சீனா, கியூபா, வியட்நாம், லாவோஸ், வட கொரியா போன்ற நாடுகள் பின்பற்றுகின்றன.

### நன்மைகள்

கல்வி, மருத்துவம், போக்குவரத்து, குடி நீர், உணவு, மின்சாரம் போன்ற துறைகள்

அரசுக் கட்டுப்பாட்டில் இயங்கும். அனைத்துத் துறைகளிலும் அரசு நிர்ணயிக்கும் சேவைக் கட்டணம் எல்லா மக்களுக்கும் குறிப்பாக ஏழைகளுக்கு ஏற்ற வகையில் இருக்கும். இதனால் ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு குறையும். லாபத்தை விட சமூக நலனே முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும். நோயாளிகள், முதியவர்கள், வறியவர்கள் என எல்லோருக்கும் அரசின் பாதுகாப்பு நலத் திட்ட உதவிகள் முழுமையாகக் கிடைக்கும்.

### தீமைகள்

எல்லாத் துறையும் அரசுக் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதால் அரசு ஊழியர்களிடம் மெத்தனம், லஞ்சம், ஊழல் போன்றவை அதிகரிக்கலாம்.

### 3. கலப்புப் பொருளாதார முறை (Mixed Economic System)

கலப்புப் பொருளாதாரம் என்பது ஒன்றுக்கு மேற்பட்ட பொருளாதார முறைகளின் அம்சங்களை உள்ளடக்கிய பொருளாதார முறை ஆகும். பொதுவாக இது தனியுடைமை அரசுடைமை நிறுவனங்கள் இரண்டையும் கொண்ட அல்லது முதலாளித்துவம், சோசலிசம் ஆகிய இரண்டு கூறுகளைக் கொண்ட அல்லது சந்தைப் பொருளாதாரம், திட்டமிட்ட பொருளாதாரம் இரண்டும் கலப்பாக அமைந்த ஒரு பொருளாதாரம் ஆகும்.

மையப்படுத்தப்பட்ட பொருளாதாரத் திட்டமிடலுடன் கூடிய ஓரளவு தனியார் பொருளியல் சுதந்திரமாகும். இப்பொருளாதாரத் திட்டமிடல் சூழலியம், சமுதாய நலம் தொடர்பான தலையீடாகவோ, சில உற்பத்திச் சாதனங்களை அரசு உடைமையாக வைத்திருத்தல் என்பவனவற்றை உள்ளடக்கலாம்.

## இஸ்லாமியப் பொருளாதாரம்

இஸ்லாம் கற்றுத் தந்துள்ள பொருளாதார முறை என்பது மனிதர்களின் தேவையை நியாயமாகப் பூர்த்தி செய்தும், சமூக நலன்களைப் பாதுகாத்தும், படைத்த இறைவனால் உருவாக்கப்பட்ட ஷரீஅத் சட்டத்தின் அடிப்படையிலும், அவன் நிர்ணயித்த வரம்புகளுக்குள் செயல்படும் நீதி சார்ந்த பொருளாதார முறையாகும். இது நியாயம், சமநிலை, பொறுப்பு, வட்டி தடை, தானம், தொழில் ஊக்கம் போன்றவற்றை நிலை நிறுத்துகிறது.

இறைவன் திருமறையில் இவ்வாறு கூறுகிறான்: ‘வானங்களிலும், பூமியிலும் உள்ள யாவும் அல்லாஹ்வுக்கே உரியனவாகும்’ (திருக்குர்ஆன் 2:284)

இவ்வசனத்தில் உலகில் உள்ள அனைத்துச் செல்வமும் அல்லாஹ்வுக்கே உரியதாகக் குறிப்பிடுகிறான். மற்றுமொரு வசனத்தில் இவ்வாறு கூறுகிறான்: ‘அல்லாஹ் தான் நாடுகின்றவருக்குத் தாராளமாக வாழ்வாதாரம் வழங்குகின்றான். மேலும், தான் நாடுகின்றவர்க்குக் குறைவாகக் கொடுக்கின்றான் என்பதை இவர்கள் அறியவில்லையா? இதில் சான்றுகள் உள்ளன; நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு!’ (திருக்குர்ஆன் 39:52)

இறைவன் தனக்கு உரித்தான செல்வத்திலிருந்து தான் நாடியவர்களுக்குத் தாராளமாகவோ, அளவாகவோ தந்து அந்தச் செல்வதை எப்படியெல்லாம் கையாள வேண்டும், எப்படியெல்லாம் கையாளக் கூடாது என்றெல்லாம் வரம்புகளை நிர்ணயித்து மனிதர்களை இறைவன் பொறுப்பாளிகளாக ஆக்கியிருக்கின்றான்.

இஸ்லாமியப் பொருளாதார முறை என்பது படைத்த இறைவனால் வகுக்கப்பட்டது. இந்த முறை ஒரு சமூகமும் தனி மனிதரும் எவ்வித இன்னல்களுக்கும், பொருளாதார நெருக்கடிகளுக்கும் ஆளாகாமல், குறிப்பாக ஏழை மக்களின் பொருளாதார நலனும், பெண்களின் பொருளாதார நலனும் முக்கிய அங்கமாகக் கொண்டுள்ளது.

உலகில் சவூதி, துபாய், கத்தார், குவைத், பஹ்ரைன், இந்தோனேஷியா, ஈரான், சூடான், வங்கதேசம், துருக்கி போன்ற நாடுகள் இந்த முறையைப் பின்பற்றுகின்றன. இஸ்லாமியப் பொருளாதார முறையின் பல்வேறு சிறப்பு அம்சங்களைக் காணலாம்.

## 1. ஜகாத் (கட்டாய தானம்)

ஜகாத்தைக் குறித்து திருமறையில் பல் வேறு இடங்களில் இறைவன் இவ்வாறு கூறு கிறான். 'தொழுகையை நிலைநாட்டுங்கள்; இன்னும் ஜகாத்தைக் கொடுத்து வாருங்கள்'

திருமறையில் எங்கெல்லாம் வணக்கத்தை (தொழுகை) கடைப்பிடிக்க வலியுறுத்தப் படுகிறதோ, அங்கெல்லாம் ஜகாத் (தானம்) முறையாகக் கொடுக்க வலியுறுத்தப்படுகிறது. கிட்டத்தட்ட வணக்க வழிபாட்டின் ஓர் அங்க மாகவே ஜகாத் திகழ்கிறது.

ஜகாத் என்பது தங்கம் வெள்ளி போன்ற ஆபரங்களையோ அல்லது அதன் மதிப்புக்கு நிகரான பணத்தையோ எவர் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அதிகமாகச் சேமித்து வைத்திருப்பாரோ அவர் மீது ஜகாத் கட்டாயக் கடமை. அதிலிருந்து 2.5 விழுக்காடு ஜகாத் கொடுக்க வேண்டும். ஜகாத் ஏழைகளின் பொருளாதாரத்தை உயர்த்தும் திட்டமாகவும், வறுமையை ஒழிக்க வழிவகை செய்யும் சட்டமாகவும் திகழ்கிறது.

## 2. மஹர்

மஹர் என்பது மணமகன் திருமணத்தின் போது மணமகளுக்கு மனமுவந்து வழங்கும் மணக்கொடையாகும். மணக்கொடை என் றால் வரதட்சணை போன்று கேட்டு கொடு மைப்படுத்தும் மணக்கொடை அல்ல. மண மகள் தனக்கு விரும்பியதைக் கேட்டு அதை மணமகன் மனநிறைவோடு கொடுத்து திருமணம் செய்யும் மணக்கொடை.

இது குறித்து இறைவன் திருமறையில் இவ்வாறு கூறுகிறான்: 'பெண்களுக்கு அவர் களுக்குரிய மஹரை (கடமையெனக் கருதி) மனமுவந்து அளித்துவிடுங்கள்! ஆயினும், அந்த மஹரிலிருந்து ஒரு பாகத்தை அவர்கள் உங்களுக்கு மனமுவந்து விட்டுக் கொடுத் தால், அதனை நீங்கள் தயக்கமின்றி அனுபவிக் கலாம்'. (திருக்குர்ஆன் 4:4)

இந்த வசனத்தில் இறைவன் பெண்களுக்கு அவர்களுக்குரிய மஹர் என்று குறிப்பிடு கிறான். அவர்களுக்குரிய மஹர் என்றால் அவர்கள் என்ன விரும்புகிறார்களோ அதை எந்த அளவில் விரும்புகிறார்களோ அதை அவர்களுக்கு அளவில் குறைவில்லாமல் கொடுத்துவிட வேண்டும்.

ஒரு கணவர் விவாகரத்தினாலோ அல்லது வேறு எக்காரணத்தைக் கொண்டும் கொடுத்த மணக்கொடையைத் திருப்பிக் கேட்க உரிமை இல்லை. அது மட்டுமின்றி தனக்காகக் கொடுக்கப்பட்ட மணக்கொடையை அடுத்த தலைமுறைக்காக விட்டுச்செல்லும் பெற்றோர் களும் நம் சமூகத்தில் அதிகம்.

ஆகவே இந்த மணக்கொடை என்பது ஒரு பெண் தன் வாழ்க்கைத் துணையை இழந் தாலும், தன் வாழ்நாள் முழுவதிலும் தொடர்ந்து பயணிக்கும் ஓர் நீடித்த முதலீடாகவும், பல தலைமுறைகளைப் பாதுகாக்கும் மணக்கொடை ஓர் அருட்கொடையாகவும் திகழ்கிறது.

## 3. இத்தா காலம்

இத்தா காலம் என்பது கணவரை இழந்த மனைவி நான்கு மாதம் பத்து நாள்கள் வேறு எந்தத் திருமண ஒப்பந்தமும் செய்யாமல் காத்திருக்கும் காலமாகும். ஒரு கணவர் மரணடைந்து விட்டாலோ அல்லது விவாகரத்துச் செய்து விட்டாலோ, மனைவி இத்தா காலத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

'மேலும், கர்ப்பிணிகளுக்கான இத்தா வரம்பு அவர்கள் குழந்தை பெற்றெடுப் பதுடன் முடிகின்றது. யார் அல்லாஹ்வுக்கு அஞ்சுகின்றாரோ அவருடைய விவகாரத் தில் அல்லாஹ் இலகுவை ஏற்படுத்தியிருக் கின்றான்' (திருக்குர்ஆன் 65:5)

ஒரு குழந்தை பெற்றெடுப்பது வரை இத்தா இருக்கிறது. அது மட்டுமின்றி இறைவன் இன்னும் ஓர் வசனத்தில் இவ்வாறு கூறுகிறான். 'அவர்கள் கர்ப்பிணிகளாய் இருந்தால், குழந்தை பெற்றெடுக்கும் வரையில் அவர்களுக்குச் செலவுக்குக் கொடுங்கள்' (திருக்குர்ஆன் 65:6)

மணவிலக்கிற்குப் பிறகு இத்தாவின் காலத்திலும் மனைவின் செலவினங்களை அந்த கணவர் ஏற்பது என்பது பெண்களின் பொருளாதாரம் பின்தங்காமல் உயர்த்திப் பிடிக்கும் பொற் கொடியாய்த் திகழ்கிறது.

# ஃபலஸ்தீனப் போராட்டத்தின் அடையாளம்

# அபூ உபைதா



- நாகூர் ரிஸ்வான்

ஃபலஸ்தீன யுத்தம் தொடங்கிய நாள் முதல் உலகம் முழுவதும் உள்ள ஊடகங்கள், ஃபலஸ்தீன மக்கள், அரபு நாடுகள் மட்டுமின்றி இஸ்ரேலும் ஒரு குறிப்பிட்ட நபரின் வீடியோ பதிவு எப்போது வரும் என்று ஆவலோடு காத்துக்கொண்டிருப்பார்கள்.

அவர்தான் ஹமாஸின் இராணுவப் பிரிவான ‘இஸ்ஸதீன் அல் கஸ்ஸாம்’ அமைப்பின் செய்தித் தொடர்பாளர் அபூ உபைதா. கடந்த 18 ஆண்டுகளுக்கும் மேலாக இஸ்ரேல் வெறுக்கும் ஒரு பெயராக இருந்ததோடு அவர் ஃபலஸ்தீனப் போராட்டத்தின் அடையாளமாகவும் திகழ்ந்தார்.

கடந்த ஆகஸ்ட் 30 அன்று காஸா நகரின் ரிமால் பகுதியில் உள்ள ஓர் அடுக்குமாடிக் கட்டிடத்தின் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் அபூ உபைதா உயிர்த்தியாகி (ஷஹீத்) ஆனார். இஸ்ரேல் இதை உடனடியாக உற் சாகத்துடன் அறிவித்தது. ஆனால் ஹமாஸ் தொடக்கத்தில் மௌனமாக இருந்தது. கடந்த டிசம்பர் 29 அன்று அல் கஸ்ஸாம் பிரிகேட்ஸ் அதிகாரப்பூர்வமாக அவரது ஷஹாதத்தை உறுதிப்படுத்தி, முதல் முறையாக அவரது முகமூடி இல்லாத புகைப்படத்தையும் வெளியிட்டது. அபூ உபைதாவின் உண்மைப் பெயர் ஹுதைஃபா சமீர் அப்துல்லா அல் கஹ்லூத். இவர் 1985இல் பிறந்தவர்.

அபூ உபைதா என்ற பெயர் அவருக்கு ஒரு புனைப்பெயரே ஆகும். இஸ்லாமிய வரலாற்றில் ஜெருசலேம் நகரத்தை மீட்டெடுத்த மாவீரர் அபூ உபைதா பின் ஜர்ராஹ்வின் நினைவாக இந்தப் பெயரை அவர் சூட்டிக்கொண்டார். வீடியோக்களில் தோன்றும் போது அவர் எப்போதும் ராணுவ உடையிலும், தனது முகத்தைச் சிவப்பு நிற குஃபியாவால் (Keffiyeh) மூடியபடியும் இருப்பார். அவரது கண்கள் மட்டுமே வெளியே தெரியும். ஒரு கம்பீரமான குரலில், ஏற்ற

**அபூ உபைதா வெறும் ஒரு நபரோ, செய்தித் தொடர்பாளர் மட்டுமல்ல, அவர் இன்று ஃபலஸ்தீனப் போராட்டத்தின் ஒரு குறியீடு. தற்போது ஹமாஸ் ஒரு புதிய செய்தித் தொடர்பாளரை நியமித்திருக்கிறது. அவரும் அதே புனைப்பெயரான 'அபூ உபைதா'வை ஏற்றுக்கொண்டு, இந்தப் பாத்திரத்தை குறியீட்டு ரீதியாகத் தொடர்கிறார். அபூ உபைதாவின் குரல் இனிவரும் காலங்களிலும் தொடரவிருக்கிறது.**

இறக்கங்களுடன் அவர் பேசும் அரபு மொழி உரைகள், உலகெங்கிலும் உள்ள அவரது ஆதரவாளர்களைக் கவர்ந்தன.

2002ஆம் ஆண்டிலேயே இவரது பெயர் ஊடகங்களில் அடிபடத் தொடங்கினாலும், 2005ஆம் ஆண்டு ஹமாஸின் அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளராகப் பொறுப்பேற்றார். குறிப்பாக 2006ஆம் ஆண்டு, இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் தனது குடும்பத்தை இழந்த ஹுதா என்ற சிறுமியின் கண்ணீருக்குப் பழிவாங்கும் விதமாக கிலாத் ஷாலித் என்ற இஸ்ரேலிய வீரரை ஹமாஸ் சிறைபிடித்தது. அந்தச் சம்பவத்திற்குப் பொறுப்பேற்று அபூ உபைதா விடுத்த அறிக்கை, அவரை உலகளவில் கவனிக்க வைத்தது.

அண்மைக்கால காஸா போர்க் களத்தின் குரல் இவர்தான். இஸ்ரேலிய இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள், அழிக்கப்பட்ட இராணுவ டாங்குகள், ஹமாஸின் வெற்றிகள் குறித்தெல்லாம் தரவுகளை அவர் அவ்வப்போது வெளியிட்டு வந்தார். இஸ்ரேல் மறைக்க நினைக்கும் பல இராணுவ, பொருளாதார இழப்புகளைத் தனது உரைகளின் மூலம் அவர் அம்பலப்படுத்தினார். அவரது உரைகள் உடனுக்குடன் பல உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுப் பகிரப்பட்டன.

இஸ்ரேலால் பலமுறை அவரது வீடு தகர்க்கப்பட்டதாகச் செய்திகள் வந்தாலும், அவர் ஒரு நிழலைப் போலவே இஸ்ரேலின் பிடியில் சிக்காமல் இருந்து வந்தார். இந்நிலையில்தான் அவர் ஷஹீதான செய்தி அண்மையில் அதிகாரப்பூர்வமாகக் கிடைத்திருக்கிறது.


ஷஹீத் அபூ உபைதா

அபூ உபைதா வெறும் ஒரு நபரோ, செய்தித் தொடர்பாளர் மட்டுமல்ல, அவர் இன்று ஃபலஸ்தீனப் போராட்டத்தின் ஒரு குறியீடு. தற்போது ஹமாஸ் ஒரு புதிய செய்தித் தொடர்பாளரை நியமித்திருக்கிறது. அவரும் அதே புனைப்பெயரான 'அபூ உபைதா'வை ஏற்றுக்கொண்டு, இந்தப் பாத்திரத்தை குறியீட்டு ரீதியாகத் தொடர்கிறார். அபூ உபைதாவின் குரல் இனிவரும் காலங்களிலும் தொடரவிருக்கிறது.

இஸ்ரேல் இவரைப் போன்ற பல ஹமாஸ் தலைவர்களைத் தொடர்ச்சியாகத் திட்டமிட்டு முறியடிக்க முயன்றாலும், அபூ உபைதாக்கள் ஃபலஸ்தீன மண்ணில் முளைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

All India Ideal Teacher Association(AIITA) - தமிழ்நாடு சார்பாக மாநில அளவில் கடையநல்லூர், திருச்சி, விருதுநகர், சென்னை, கிருஷ்ணகிரி, செய்யாறு ஆகிய பகுதிகளில் ஆசிரியர் தின நிகழ்வுகள் நடைபெற்றது. மாநில அளவில் நடைபெற்ற இணைய வழி நிகழ்ச்சியில் **Dr.K.V.S. ஹபீப் முஹம்மது** அவர்கள் ஆற்றிய உரை இந்த இதழின் மேடையை அலங்கரிக்கிறது.




# ஆசிரியர்களைக் கொண்டாடுவோம்!

**தொகுப்பு :**
**M.முஹம்மது தௌபீக்**

> மருத்துவர் கோட்டை விட்டால் உயிர், உடல் போய் விடும். ஆசிரியர் கோட்டை விட்டால் தலைமுறையே போய்விடும். இது பொறுப்பான பணி. இது ஒரு நிலையான நல்லறம்.



Dr.K.V.S. ஹபீப் முஹம்மது

ஆசிரியர்களைக் கொண்டாடுவது என்பது அறிவைக் கொண்டாடுவது, அறிவியலைக் கொண்டாடுவதாகும். இது நாட்டின் வளர்ச்சியைக் கொண்டாடுவது, மாணவர்களின் வெற்றியைக் கொண்டாடுவதாகும்.

## ஆசிரியர்களின் சிறப்புகள்

அறிவியல் வளர்ச்சி, நாட்டின் முன்னேற்றம், மாணவர்களின் வளர்ச்சி அத்தனையும் ஆசிரியர்களின் கைகளிலேயே ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்தப் பணியை ஆசிரியர்கள் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். மிகக் கடுமையான, கடினமான, அர்ப்பணிப்போடு செய்ய வேண்டிய ஒரு பணியை ஆசிரியர்கள் செய்து கொண்டு இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு நாம் நன்றி செலுத்துகிறோம். இறைவன் அவர்களுக்கு நல்ல உடல் நலத்தையும் நீண்ட ஆயுளையும் தர வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் பணி பரந்து விரிந்தது. ஆசிரியர்கள் என்று சொல்கின்ற போது கல்விக் கூடங்களில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் மட்டுமல்ல. அழைப்பாளர்களும் ஆசிரியர்கள், பள்ளிவாசலில் உரை நிகழ்த்துபவர்களும், இமாம்களும் ஒரு வகையில் ஆசிரியர்கள், ஆலிம்களும் ஆசிரியர்கள். இவை எல்லாவற்றையும் உள்ளடக்கியதுதான் ஆசிரியர்கள் எனும் சொல்.

ஆசிரியர்களின் மதிப்பு இஸ்லாத்தின் பார்வையில் அவர்கள் நபிமார்களின் வாரிசுகள். 'நான் எதையும் வாரிசாக விட்டுச் செல்லவில்லை, சொத்துகளையோ சுகங்களையோ வாரிசாக விட்டுச் செல்லவில்லை, நான் அறிஞர்களைத்தான் எனது வாரிசுகளாக விட்டுச் செல்கிறேன்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

'எவர்களுக்கு ஞானம் வழங்கப்பட்டுள்ளதோ அவர்களுக்கு அல்லாஹ் உயர்ந்த பதவிகளை வழங்குவான்' என்று திருமறைக் குர்ஆன்(58:11) எடுத்துரைக்கின்றது.

நம்முடைய பெற்றோருக்கு அடுத்த இடத்தில் இருப்பவர்கள் ஆசிரியர்கள். பெற்றோர்களுக்கு அடுத்தபடியாக நாம் அதிக நேரத்தை ஆசிரியர்களோடுதான் செலவிடுகின்றோம். ஆசிரியர்களை நாம் இரண்டாவது பெற்றோர்கள் என்று கூட அழைக்கிறோம்.

ஒவ்வொரு மாணவருடைய வெற்றிக்குப் பின்னாலும் ஓர் ஆசிரியர் இருக்கிறார் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. நாம் நன்றாக வாழ்வதற்காகப் பெற்றோர்களுக்குக் கடமைப்பட்டு இருக்கிறோம். ஆனால் நாம் மிகச் சிறந்தவர்களாக வாழ்வதற்காக ஆசிரியர்களுக்குக் கடமைப்பட்டு இருக்கிறோம். ஏனென்றால் ஆசிரியர்கள் ஒரு தலைமுறையை உருவாக்குகிறார்கள்.

‘இந்தியாவின் எதிர்காலம் வகுப்பறைகளில் உருவாகிறது’ என்று கல்விக் கொள்கையில் சொல்லப்பட்டுள்ளது. வகுப்பறைகள் சீராக இருந்தால் இந்தியா சீராக இருக்கும். ஒரு கல்விக்கூடத்தின் வெற்றிக்கு முக்கியக் காரணம் ஆசிரியர்கள். சிறந்த ஆசிரியர் குழு ஒரு கல்விக் கூடத்திற்கு வாய்க்கப் பெறும் என்றால் அது ஒரு சிறந்த கல்விக் கூடமாக இருக்கும்.

## ஆசிரியர்களின் பொறுப்புகள்

ஆசிரியர் பணி ஒரு கண்ணியமான பணி. மக்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆசிரியர்களையும் மருத்துவர்களையும் கண்ணியத்துடன் பார்க்கும் நிலைமை உள்ளது.

இது ஓர் அமானிதம். மறுமையில் ‘நீ அறிவை எந்த முறையில் பயன்படுத்தினாய்?’ என்று இறைவன் கேட்பான். ‘நீ இந்தக் கல்வியை, இந்த ஆசிரியர் பொறுப்பைத் தொண்டாகப் பயன்படுத்தினாயா? அல்லது தொழிலாகப் பயன்படுத்தினாயா? என்று இறைவன் வினவும்போது என்ன பதில் சொல்லப் போகிறோம்?

வேலைக்கு வந்தோம் ஏதோ சொல்லிக் கொடுத்தோம், வீட்டிற்குப் போனோம், சம்பளத்தை வாங்கிப் பையில் வைத்துக் கொண்டோம் என்றால் அதனைத் தொழிலாக மட்டுமே பார்த்திருக்கின்றோம் என்று பொருள். ஈடுபாட்டோடு செய்வதற்குப் பெயர்தான் ஆசிரியப்பணி.

ஒரு வகையில் இது புனிதப்பணி. மருத்துவர் கோட்டை விட்டால் உயிர், உடல் போய்விடும். ஆசிரியர் கோட்டை விட்டால் தலைமுறையே போய்விடும். இது பொறுப்பான பணி. இது ஒரு நிலையான நல்லறம்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ‘மனிதன் இறந்த பிறகு மூன்று விஷயங்கள் அவனைப் பின் தொடர்கின்றன. அதில் ஒன்று பலன் அளிக்கும் கல்வி. நீங்கள் எழுதிய புத்தகங்கள், நீங்கள் பேசிய பேச்சுகள், நீங்கள் கூறிய அறிவுரைகள், நீங்கள் நிகழ்த்திய சொற்பொழிவுகள், நீங்கள் நிகழ்த்திய பாடங்கள், நீங்கள் உருவாக்கிய மாணவர்கள் எல்லாமே பலன் தரும் கல்வியில் அடங்கும். நல்ல மாணவர்களை நீங்கள் உருவாக்கினால் அது மறுமையில் உங்களுக்கு அதிகமான கூலியைப் பெற்றுத் தரக்கூடிய நிலையான நல்லறமாக மாறும்.

## தலைமுறையை உருவாக்குங்கள்

ஆசிரியர்கள் முதலாவதாக நல்ல ஆளுமை மிக்க தலைமுறையை உருவாக்க வேண்டும். அதுதான் நல்ல மனிதனாக அவனை உருவாக்கும். அறிவு ரீதியிலும் அவன் சிறந்தவனாக இருக்க வேண்டும்.

திருச்சி






செய்யாறு



கடையநல்லூர்



கிருஷ்ணகிரி



சென்னை



விருதுநகர்

ஒழுக்க ரீதியிலும் சிறந்தவனாக இருக்க வேண்டும். பண்பாட்டு ரீதியிலும் அவன் சிறந்தவனாக இருக்க வேண்டும். ஆகவே மிகச் சிறந்த ஒரு ஆளுமை மிக்க மனிதனை உருவாக்குவதுதான் ஆசிரியர்களுடைய பணி.

எழுதி வைத்த சில குறிப்புகளை எடுத்துச் சென்று அங்கே ஒப்பித்து விட்டு வீட்டுக்கு வருவது அல்ல ஆசிரியர் பணி. வழிகாட்டியாக, மாணவர்களின் அறிவையும் வளர்க்க வேண்டும்; அவர்களுடைய உள்ளத்தையும் வளர்க்க வேண்டும். அந்த உள்ளத்திலே சிந்திக்கின்ற ஆற்றலை உருவாக்க வேண்டும். தகவல்களைச் சொல்லித்தருவது எளிது. தகவலைச் சொல்லித் தருவதற்கு ஆசிரியர் தேவை இல்லை. அதற்கு கூகுள் போதுமானது. இல்ம்(கல்வி) வேறு, ஃபிக்ர் (சிந்தனை) வேறு!

நீங்கள் சிந்திக்க வேண்டாமா என்று திருக்குர்ஆன் வினா எழுப்புகிறது. நீங்கள் இந்த பூமியிலே சுற்றித் திரிந்து பாருங்கள். இறைவன் இந்தப் படைப்புகளை எவ்வாறு படைத்துள்ளான் என்று பாருங்கள் என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுவதைப் பார்க்கிறோம். ஆகவே சிந்திக்கின்ற ஆற்றலை உருவாக்குவது மிக முக்கியமான ஒரு பணி.

## படிப்பினைகளையும் பாடமாக்குங்கள்

நீங்கள் அறிவியல் ஆசிரியராக இருக்கலாம், வரலாற்று ஆசிரியராக இருக்கலாம், எந்த ஆசிரியராகவும் இருக்கலாம். வரலாற்றைச் சொல்லும்போது படிப்பினையையும் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். மன்னர்கள் செய்த சண்டைகளெல்லாம் மதச் சண்டைகள் அல்ல என்பதைப் புரிய வைக்க வேண்டும். ஏனென்றால் இந்த நாட்டில் வகுப்புவாதிகள் மன்னர்களின் சண்டைகளைப் பெரிதுபடுத்தி ஏதோ இந்து மன்னரும் முஸ்லிம் மன்னரும் சண்டை போட்டது போன்று சித்திரிக்கின்றார்கள். மாணவர்கள் உள்ளத்தில் விஷத்தை விதைக்கின்றார்கள். முஸ்லிம் மன்னரும் முஸ்லிம் மன்னரும் மோதியுள்ளார்கள். முஸ்லிம்களின் படையில் இந்துக்கள் இருப்பார்கள். இந்துக்களின் படையில் முஸ்லிம்கள் இருப்பார்கள். இந்துப் படையில் தளபதியாக முஸ்லிம் இருப்பார். முஸ்லிம் படையில் தளபதியாக இந்து இருப்பார். இதுபோன்ற தெளிவுகளை மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தால் வெறுப்பு குறையும்.

ஜாதியைப் பற்றி பாடம் எடுக்கும் போது caste system in india என்று இந்த நாட்டில் எத்தனை ஜாதிகள் இருக்கின்றன என்ற தகவலைச் சொல்வதுடன் நிற்காமல் ஜாதிகள் உருவான காரணம் என்ன? அதன் பின்னணி என்ன? என்பது குறித்தும் விளக்க வேண்டும். வறுமையைப் பற்றி பாடம் எடுக்கும்போது இந்த நாட்டில் எவ்வளவு ஏழைகள் இருக்கின்றார்கள் என்ற தகவலை மட்டும் சொல்லிச் செல்லாமல் வறுமைக்கான காரணங்கள் என்ன? அதை ஒழிப்பதற்கான வழிமுறைகள் என்ன? என்று மாணவர்களுக்கு சொல்லித் தர வேண்டும்.

## ஒழுக்க விழுமங்களைப் போதியுங்கள்

மாணவர்களுக்கு ஒழுக்க விழுமங்களைச் சொல்லித்தர வேண்டும். நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் தனக்கு ஞானம் வேண்டிப் பிரார்த்தித்ததுடன் உத்தமர்களோடு தம்மை இணைத்து வைக்குமாறு இறைவனிடம் வேண்டினார்கள். அறிவு பெறுவது ஒழுக்கமுள்ளவர்களாகத் திகழ்வதற்காகத்தான்.

கல்வி மாற்றத்தை நிகழ்த்த வேண்டும். கல்வி வெறும் சுமையாக மாறிவிடக்கூடாது. வேதத்தின்படி நடக்காதவர்களைத் திருமறைக் குர்ஆன் வேதம் சுமந்த கழுதைகள் என்று இடித்துரைக்கின்றது. கழுதையின் முதுகில் எவ்வளவு சுமைகளை ஏற்றினாலும் தன் முதுகில் இருப்பது வரலாற்று நூலா, மருத்துவ நூலா, குர்ஆனா என்பதெல்லாம் அதற்குத் தெரியாது. கழுதையைப் பொறுத்தவரை அது ஒரு பொதி அவ்வளவுதான்.

நீங்கள் மாணவர்களுக்கு வெறும் பாடங்களைக் கற்பித்து விட்டு அவர்களுக்கு ஒழுக்கத்தை கற்பிக்கவில்லை என்றால் அவர்கள் வேதம் சுமந்த கழுதைகளாகி விடுவார்கள். இன்றைக்கு நம் நாட்டில்

அதுதான் நடந்து கொண்டு இருக்கிறது. திறமையான வக்கீல்கள் இருக்கின்றார்கள். ஆனால் நல்ல ஒழுக்கமும் திறமையும் உள்ள வக்கீல்கள் மிகவும் குறைவு. அதுபோல நல்ல திறமையான மருத்துவர்கள் இருக்கின் றார்கள். ஆனால் இந்த டெஸ்டை எடு, அந்த டெஸ்டை எடு என்று பணம் பார்ப்பவர்களும் இருக்கின்றார்கள்.

வல்லவர்களை உருவாக்க முடிகின்ற நம்மால் நல்லவர்களை உருவாக்க முடிய வில்லை. இதுதான் நமக்கு முன்னால் உள்ள பிரச்னை. எனவே ஒழுக்கம் சார்ந்த விழுமங் களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். அத்தோடு குடிமைப் பண்புகளையும் கற்றுத் தர வேண்டும். வீட்டைச் சுத்தமாக வைப்பது எப்படி? தெரு வைச் சுத்தமாக வைப்பது எப்படி? என்று இன்றைய தலைமுறைக்குத் தெரிவதில்லை.

## அக்கறை கொள்ளுங்கள்

மாணவர்களுடைய நலனில் ஆசிரியர் களுக்கு அக்கறை இருக்க வேண்டும். எந்த உணர்வுகளும் இல்லாமல் பாடத்தை நடத்தி விட்டுப்போவது அல்ல. ஒவ்வொரு மாண வனைப் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும்.

உமர்(ரலி) அவர்களின் காலத்தில் முஆத் இப்னு ஜபல்(ரலி) மிகப்பெரும் ஆசிரியர். அவரிடம் நான்காயிரம் மாணவர்கள் பயின் றார்கள். அந்த நான்காயிரம் மாணவர்களோடும் அவர் தனித்தனியாகத் தொடர்பு வைத்திருந்தார் என்று வரலாற்றிலே பார்க்க முடிக்கிறது.

‘தாரே ஜமீன் பர்’ என்ற ஒரு திரைப்படத்தை நீங்கள் பார்த்திருக்கக் கூடும். அத்திரைப் படத்தில் ஒரு குழந்தைக்குச் சரியாக படிப்பு வரவில்லை என்று மற்றொரு பள்ளிக்கூடத்தில் சேர்க்கிறார்கள். அங்கு ஓர் ஆசிரியர் அந்த மாணவரின் கற்றல் குறைபாட்டைக் கண்டு பிடிக்கிறார். அதற்கேற்ப அந்த மாணவனுக் குப் பாடங்களைக் கற்றுக் கொடுத்து, சரியான மருத்துவ முறைகளைச் செய்து அந்த மாண வரைச் சிறந்த மாணவராக உருவாக்குகிறார்.

ஒரு மாணவன் பள்ளிக்கு வரவில்லை என்றாலும் ஆசிரியர் அந்த மாணவனின் வீட்டிற்குச் சென்று விசாரித்து அந்த மாண வனை பள்ளிக்கு அழைத்து வருவதை முந்தைய காலத்தில் பார்த்திருக்கிறேன். படிப் பதற்குக் கட்டணம் செலுத்த முடியவில்லை என்றால் தங்கள் கையிலிருந்து படிப்பதற்கும் புத்தகம் வாங்குவதற்குப் பணம் கொடுத்த ஆசிரியர்களையும் நான் பார்த்திருக்கின்றேன்.

நான் படித்த பள்ளிக்கூடத்தில் எங்களு டைய தாளாளர் எப்பொழுதும் ஒரு டைரி வைத்திருப்பார். அதில் குறைவான மதிப் பெண்கள் எடுத்த மாணவர்களின் பெயர் களை எழுதி வைத்திருப்பார். மாணவர்களின் பெற்றோர்களை வீட்டிற்குச் சென்று அவர் களுடைய பிள்ளைகளின் மதிப்பெண்களைக் காட்டி படிக்க வலியுறுத்துவார்.

மாணவர்களிடையே ஏற்படும் மாற்றங் களை நாம் கவனிக்க வேண்டும். குறிப்பாக நன்றாகப் படித்த மாணவன் திடீரென்று மதிப் பெண் குறைவாக எடுத்தாலோ, திடீரென்று சோகமாக இருந்தாலோ ஏன் என்று கவனிக்க வேண்டும். உடல்நிலை சரி இல்லையா, வீட்டில் ஏதேனும் பிரச்னையா அல்லது போதைப் பொருட்களுக்கு அடிமையாகி விட்டானா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

## உற்சாகமூட்டுங்கள்

மோசமான ஆசிரியர் வெறுமனே பேசு வார். புத்தகத்தில் உள்ளதை படித்து ஒப்பிப் பார். நல்ல ஆசிரியர் போதிப்பார். ஒரு சிறந்த ஆசிரியர் எடுத்துக்காட்டுகள் கூறு வார், வாதிப்பார், விளக்குவார். மிகச் சிறந்த ஆசிரியர் உற்சாகப்படுத்துவார்.

## தகுதியை வளர்த்துக் கொள்ளுங்கள்

ஆசிரியர்கள் தங்களது திறன்களை வளர்த்துக் கொண்டே இருக்க வேண்டும். அவர்களிடம் தூரநோக்குச் சிந்தனை இருக்க வேண்டும். ஆர்வம், துடிப்பு, ஈடுபாடு இருக்க வேண்டும். ஆசிரியர்களும் ஒருவகையில் மாணவர்கள்தான். அவர்களும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். ஆசிரியர்கள் கற்பிப்பதற்காகப் படிக்க வேண்டும்.

ஓர் ஆசிரியர் ஒரு வாரத்திற்கு 15 மணி நேரம் வகுப்பு எடுக்க வேண்டும். 25 மணி நேரம் படிக்க வேண்டும் என்று யுஜிசி கூறுகிறது. ஏற்கனவே கல்லூரியில் படித்ததையே ஒப்பித்துக் கொண்டிருக்கக் கூடிய ஆசிரியர்கள் எப்படி மாணவர்களை உருவாக்க முடியும்? கல்லூரி முடித்த பிறகு வாசிப்பை நிறுத்தி விடுகிறார்கள்.

இன்று பல கல்விக்கூடங்கள் ஆண்டில் பாதி நாள்கள் மட்டுமே இயங்குகின்றன. சற்றேறக்குறைய 180 நாள்கள் மட்டுமே வேலை நாள்கள். மற்ற அனைத்து நாள்களும் விடுமுறை. அது தவிர ஆசிரியர்கள் 30 நாள்கள் விடுப்பு எடுத்துக் கொள்ளலாம். இவற்றையெல்லாம் கழித்து விட்டால் வெறும் 150 நாள்கள் மட்டுமே உள்ளன. இந்த 150 நாள்கள் ஒழுங்காக வேலை செய்யவில்லை என்றால் எப்படி?

## முன்மாதிரியாகத் திகழுங்கள்

ஓர் ஆசிரியர் எப்படி கல்வி கற்பிக்கிறார் என்பது முக்கியமல்ல, அவர் எப்படி இருக்கிறார் என்பது தான் முக்கியம் என்று அறிஞர் ஒருவர் கூறினார். மாணவர்கள் முதலில் பெற்றோர்களிடமிருந்து கற்றுக் கொள்கிறார்கள். அதன்பிறகு ஆசிரியர்களிடம் இருந்துதான் கற்கிறார்கள். குறிப்பாக குழந்தைப் பருவத்தில் குழந்தைகள் ஆசிரியர் என்ன செய்கிறாரோ அதை அப்படியே செய்வார்கள்.

ஊருக்கு உபதேசம் செய்யும் உத்தமர்களால் எந்த ஒரு மாற்றமும் நிகழப் போவதில்லை. இது ஆசிரியர்களுக்கும் பொருந்தும். புகைபிடிக்கும் ஆசிரியர் ஒரு முன்மாதிரியாக இருக்க முடியுமா? நேரம் தவறாமையைக் கடைப்பிடிக்காமல் இருக்கும் ஆசிரியரால் மாணவர்களிடத்தில் தாக்கத்தை உருவாக்க முடியுமா?

ஆயிரக்கணக்கான நீதி நூல்களில் இருந்து கற்றுக் கொள்ள முடியாதவற்றை ஒரு ஆசிரியரிடமிருந்து மாணவன் கற்றுக் கொள்ள முடியும். ஆகவே ஆசிரியர்கள் துடிதுடிப்பானவர்களாகவும் ஆர்வம் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். கடினமாக உழைக்க வேண்டும். முன்மாதிரிகளாக இருக்க வேண்டும்.

## நாம் செய்ய வேண்டியது..!

மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் ஆசிரியர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். ஆசிரியர்களிடத்தில் மாணவர்கள் பணிவாக நடந்து கொள்ள வேண்டும். ஆசிரியரைப் பட்டப்பெயர் வைத்து அழைப்பதும், வகுப்பிலே ஊளை இடுவதும் ஆசிரியருக்குத் தரும் மரியாதை அல்ல. தங்கள் பிள்ளைகளை ஆசிரியர்கள் கண்டிப்பதை பெற்றோர்கள் விரும்புவதில்லை. உடனே முறையிடுகின்றார்கள்.

வகுப்பில் பாடங்களைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். ஆசிரியர்கள் மிகவும் சிரமப்பட்டு வகுப்பிற்குப் பாடங்களைத் தயாரித்து வருகிறார்கள். பாடம் நடத்துவது மிகக் கடினமான பணிகளில் ஒன்று. பாடத்தைக் கவனித்தால் மட்டுமே மதிப்பெண்கள் பெற முடியும் தானும் கவனிப்பதில்லை தன் அருகில் இருப்பவரையும் கவனிக்க விடுவதில்லை.

அரசுகளும் சமூகங்களும் ஆசிரியரின் படிப்பிற்கு ஏற்ற வேலை கொடுக்க வேண்டும். அண்மையில் ஒரு செய்தியைப் படித்தேன் நியூராலஜி ஸ்பெஷலிஸ்ட் ஒருவரை ஆரம்ப சுகாதார நிலையத்தில் வேலைக்கு அமர்த்தி இருக்கிறார்கள் ஒரு ஸ்பெஷலிஸ்ட்டை எப்படி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணி அமர்த்துவது? அதுபோல பணிக்கு ஏற்ற ஊதியம் வழங்க வேண்டும். இதில் மிகவும் பரிதாபத்திற்கு உரியவர்கள் தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள் தான்.

ஆசிரியரை அனைத்து வேலைகளுக்கும் பயன்படுத்துவது தவறு. அவர் மாணவர்களுக்குப் பாடம் கற்றுக் கொடுக்கவே வருகிறார். ஆனால் மாணவர்களைப் பள்ளியில், கல்லூரிகளில் சேர்க்கும் வேலை உள்ளிட்ட பல வேலைகளைக் கொடுக்கிறார்கள். இதுவெல்லாம் ஆசிரியர்களை அவமதிக்கும் செயலாகும். அடுத்ததாக உரிய நேரத்தில் பணி உயர்வுகளைக் கொடுக்க வேண்டும்.

அல்லாஹ்வின்
விருந்தாளிகளின்
சேவையில்
29வது
வருடம்

IATA

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# அல் அமானத் ஹஜ் சர்வீஸ்

(இந்தியா, சவூதி அரசுகளின் அங்கீகாரம் பெற்றது)

## இன்ஷா அல்லாஹ்

## 2026 ஹஜ் புக்கிங் நடைபெறுகிறது.

இவ்வாண்டு செப்டம்பர் 2025லிருந்து 2026 ரமலான் வரை ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்.

## உம்ரா குரூப்:

ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா குழு புறப்படுகிறது. உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்

முழு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

TRUST WORTHY

**அல் அமானத் ஹஜ் சர்வீஸ் (இந்தியா) பி.லிட்.,**
B3, Bushra House, 1st Floor, Old No. 46, New No. 6, Nowroji Road,
Chetpet, Chennai - 600 031. Ph : 044-4860 5012 / 3, 28594441 / 2 / 3
Email : info@alamanathhajservice.com
www.alamanathhajservcie.com

**தொடர்பு கொள்வீர்**
சென்னை 044-28594441 / 2 / 3
95516 622 31
91 98410 786 36

# மறுமையை நம்பாதவர்களே வேதனைக்கு ஆளாவர்கள்

**நிராகரிப்பாளர்கள் (மக்களிடம்) கூறுகின்றார்கள்: '(நீங்கள் மரணமாகி) உங்கள் உடல் அணு அணுவாய் சிதைந்து போய்விட்ட பிறகு நீங்கள் மீண்டும் புதிதாகப் படைக்கப் படுவீர்கள் என்று உங்களுக்குச் செய்தி அறிவிக்கும் ஒருவரை நாங்கள் உங்களுக்குக் காண்பித்துத் தரவா?'**

**'இந்த மனிதர் அல்லாஹ்வின் பெயரால் பொய்யைப் புனைந்து கூறுகின்றாரா? அல்லது இவருக்குப் பைத்தியம் பிடித்திருக்கின்றதா என்பது புரியவில்லையே!'[10] இல்லை. உண்மையில், மறுமையை நம்பாதவர்கள்தாம் வேதனைக்கு ஆளாகப் போகிறார்கள். மேலும், மிக மோசமாக வழிகெட்டுப் போனவர்களும் அவர்கள்தாம்![11] இவர்கள் தங்களுக்கு முன்னாலும், பின்னாலும் சூழ்ந்துள்ள வானத்தையும் பூமியையும் என்றுமே பார்த்ததில்லையா, என்ன? நாம் நாடினால் இவர்களைப் பூமிக்கடியில் ஆழ்த்தியிருப்போம். அல்லது வானத்தின் சில துண்டுகளை இவர்கள் மீது விழச் செய்திருப்போம்.[12] இறைவன் பக்கம் திரும்புகின்ற ஒவ்வோர் அடியானுக்கும் உண்மையில் இதில் ஒரு சான்று இருக்கின்றது.**

**● அத்தியாயம் 34 ஸபா ● திருவசனங்கள் : 7 - 9**

**10.** நபிகளாரை 'பொய்யர்' என்று சொன்னால் பொதுமக்கள் அதனை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதை குறைஷித் தலைவர்கள் நல்ல முறையில் அறிந்து வைத்திருந்தார்கள். ஏனெனில் நபிகளார்(ஸல்) வாய்மையானவர் என்பதையும் தம்முடைய வாழ்நாளில் ஒரே ஒரு முறைகூட ஒரே ஒரு பொய்யைக் கூடச் சொன்னதில்லை என்பதையும் ஒட்டுமொத்த சமூகமும் அறிந்தே இருந்தது. இதனால் குறைஷித் தலைவர்கள் பொது மக்கள் மத்தியில் நபிகளாரைக் குறித்து குற்றம் சுமத்துகின்ற போது, 'இந்த மனிதர் மரணத்திற்குப் பிறகு வாழ்வு என்கிற கற்பனை செய்தும் பார்த்திராத, நடக்காத விஷயத்தைக் குறித்தெல்லாம் பேசுகின்றார்.

இந்த நிலையில் இனி இந்த விவகாரம் இரண்டில் ஒன்றாகத்தானே இருந்தாக வேண்டும்! ஒன்று, (அல்லாஹ் காப்பாற்றுவானாக!) இந்த மனிதர் வேண்டுமென்றே பொய் ஒன்றைப் புனைந்து சொல்கின்றார். அல்லது இவருக்குப் பைத்தியம் பிடித்திருக்க வேண்டும்' என்கிற ரீதியில் சொற்களை அமைத்துச் சொன்னார்கள். ஆனால் இவர்களின் இந்த 'பைத்தியம் பிடித்திருக்க வேண்டும்' என்கிற குற்றச்சாட்டுகூட 'பொய் ஒன்றைப் புனைந்து சொல்கின்றார்' என்கிற குற்றச்சாட்டைப் போன்று பொத்தலானதாய், எடுபடாததாய்த் தான் இருந்தது. ஏனெனில் அதிஅற்புதமான அளவுக்கு அறிவாற்றலும் புத்திக்கூர்மையும் கொண்ட ஓர் அறிவார்ந்த ஆளுமையை பைத்தியக்காரர் என்று புத்தி கெட்டுப் போன மனிதரால்தான், அறிவுக்குத் தாழ்ப்பாள் போட்டு மூடிவிட்ட மனிதரால்தான் ஏற்றுக் கொள்ள முடியும். இல்லையேல் கண்களைத் திறந்து வைத்துக் கொண்டு எந்த மனிதர்தான் உயிருள்ள ஈயை விழுங்கிக் கொள்வதற்கு முன் வருவார்? இதன் காரணமாகத் தான் வல்லமையும் மாண்பும் நிறைந்த அல்லாஹ் இந்த அபத்தமான கருத்தை மறுத்து எந்தவொரு வாதத்தையோ சான்றையோ சொல்லி விளக்க வேண்டிய அவசியத்தை உணரவில்லை. அதற்குப் பதிலாக மரணத்துக்குப் பிந்தைய வாழ்வும் சாத்தியமா என்கிற

29 ஆம் பக்கம் பார்க்க...

**● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்**

# ஈடேற்றமும் பேரழிவும்

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘மூன்று விஷயங்கள் ஈடேற்றம் அளிப்பவை ஆகும். மூன்று விஷயங்கள் பேரழிவை ஏற்படுத்துபவை ஆகும்.**

**ஈடேற்றம் அளிக்கின்ற விஷயங்கள் எவையெனில் (1) மறைவான நிலையிலும் வெளிப்படையான நிலையிலும் எந்த நிலையிலும் இறைவனை அஞ்சி நடந்து கொள்ளுதல். (2) மகிழ்ச்சி, அதிருப்தி ஆகிய இரண்டு நிலைமைகளிலும் உண்மை யையே பேசுதல்.[1] (3) செல்வச் செழிப்பான நிலையானாலும் வறுமையில் வாடினாலும் இரு நிலைமைகளிலும் நடுநிலைமையை மேற்கொள்ளுதல்.[2]**

**பேரழிவை ஏற்படுத்துகின்ற விஷயங்கள் எவை எனில் (1) மன இச்சைகளுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல்[3] (2) பேராசை, கஞ்சத்தனம் ஆகியவற்றுக்கு அடிமையாகிவிடுதல்[4] (3) ஆணவத்துடனும் கர்வத்துடனும் நடந்துகொள்ளுதல். இது இருப்பவற்றிலேயே மிக அருவருப்பான, இழிவான பண்பு ஆகும்.[5]**

அறிவிப்பாளர் : அபூஹுரைரா(ரலி)
நூல் : பைஹகி

**1.** மகிழ்ச்சி, அதிருப்தி ஆகிய இரண்டுக்கும் மேலாக உண்மைக்கு முக்கியத் துவம் தந்தாக வேண்டும். ஒருவருடனான நம்முடைய உறவும் தொடர்பும் இணக்க மும் இனிமையும் நிறைந்ததாய், மனத்துக்கு மகிழ்ச்சியை அளிப்பதாய் இருந் தாலும் உண்மையையே சொல்ல வேண்டும். அதனால் அந்த மனிதருக்குப் பாதிப்பு ஏற்படுமே எனத் தயங்கக் கூடாது. இதே போன்று ஒருவர் மீது தமக்குக் கோபமும் ஆத்திரமும் மிகைத்திருக்கின்ற நிலைமையிலும் கூட உண்மையையே சொல்ல வேண்டும். உண்மையைச் சொல்வதால் அந்த மனிதருக்குப் பெரும் இலாபமும் நன்மையும் கிடைப்பதாய் இருந்தாலும் அவர் மீதான கோபமும் அதிருப்தியும் உண்மையைச் சொல்வதை விட்டு நம்மைத் தடுத்துவிடக் கூடாது.

**2.** செலவிடும்போது நடுநிலையைப் பேண வேண்டும். வரையறையே இல்லாமல் மானாவாரியாகச் செலவழித்து பணத்தை விரயம் செய்யக் கூடாது. செலவைக் கட்டுப்படுத்துவதாய்ச் சொல்லிக் கொண்டு கஞ்சத்தனமாகவும் நடந்துகொள்ளக் கூடாது. இதே போன்று வறுமைக்கும் இல்லாமைக்கும் ஆளாகின்ற சூழல்களிலும் மனிதன் தன்னுடைய சுயமரியாதையை இழந்து விடக்கூடாது. மேலும் செல்வச் செழிப்பும் வளமும் சேர்ந்துவிடுகின்ற போது ஆணவமும் அகம்பாவமும் கொண்டு அலையக் கூடாது. எல்லா நிலைமைகளிலும் இறைவனுக்கு விருப்பமான, இறைவன் அவனிடம் எதிர்பார்க்கின்ற அழகிய நடத்தையையே மேற்கொள்ள வேண்டும். எந்தவொரு நிலைமையிலும் நிதானத்தை இழக்காமல் சமநிலை தவறாமல் நடந்து கொள்வதுதான் இறைவனுக்கு விருப்பமான அழகிய நடத்தை ஆகும்.

**3.** மனஇச்சைகளை இறைவனின் கட்டளைகளுக்கும் சட்டங்களுக்கும் உட்பட் டவையாய் எல்லா நிலைகளிலும் ஆக்கிக் கொள்வது அவசியம் ஆகும். மன

இச்சைகள் கட்டுப்படுத்தப்படாமல் சுதந்திரமாகக் கட்டவிழ்த்து விடப்படுமேயானால் அது பேரழிவுக்கே இட்டுச் செல்லும். மறுமையிலோ மிகப் பெரும் அழிவுக்கும் இழப் புக்கும் ஆளாவது உறுதி.

**4.** பேராசை, கஞ்சத்தனம் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்ட இயல்பைக் கொண் டிருப்பது எளிதல்ல. இந்த இயல்பை வளர்த்துக்கொள்ள வேண்டுமெனில் வெறுமனே பேராசை, கஞ்சத்தனம் ஆகியவற்றின் பக்கம் இழுத்துச் செல்கின்ற உணர்வு களையும் ஆசைகளையும் எண்ணங்களையும் கட்டுப்படுத்தி வைத்திருந்தால் மட்டும் போதாது. அதற்கும் மேலாக பேராசை, கஞ்சத்தன உணர்வுகளுக்கு நேர்மாறாக, யாதொரு விஷயத்திலும் தாராள மனப்பான்மையும் தயாள குணத்துடனும் விரிந்த உள்ளத்துடனும் பரந்த பார்வையுடனும் நடந்து கொள்ளத் தொடங்கி விடுவதும் அவசியம் ஆகும்.

**5.** கர்வமும் அகம்பாவமும் ஆணவமும் மிக மிக மோசமான, இழிவான குணங்கள் ஆகும். இவற்றால் ஏற்படும் விளைவுகளும் கேடுகளும் இழப்புகளும்கூட மிக மிக மோசமானவையாய்த்தாம் இருக்கும். இன்னும் சொல்லப்போனால் ஆணவமும் அகம்பாவமும் கர்வமும் பிடித்த மனிதன்தான் இறைவனின் வெறுப்புக்கும் சாபத்துக்கும் உரியவனாக இருக்கின்றான். மற்றெல்லாப் பாவங்க ளைப் பொறுத்தவரை, ஒருவர் திருந்துவற்கும், தம்முடைய நடத்தையை திருத் திக் கொள்வதற்குமான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால் ஆணவத்துக்கும் அகம்பாவத்திற்கும் கர்வத்திற்கும் ஆளான மனிதன் - தன்னைத் தானே மிக உயர்ந்த பீடத்தில் அமர்த்திக் கொண்டிருக்கின்ற மனிதன் - தன்னைத் தானே திருத்திக் கொள்வதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவே.

# பணமும், பொருளும்..!

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு காலம் வரும். அப்போது தீனார், திர்ஹம் தவிர வேறு எதுவும் பயன் அளிக்காது**

அறிவிப்பாளர் : மிக்தாம் பின் மஅதிகரீப்(ரலி)

நூல் : அஹ்மத்

பணமும் பொருளும் சம்பாதித்து வைத்துக்கொள்வதில் எந்தத் தவறும் இல்லை. பணம், பொருள் ஆகியவற்றின் முக்கியத்துவம் பல மடங்கு கூடிவிடுகின்ற காலம் வரும். அந்த வேளையில் தம்முடைய மார்க்கத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் கண்ணியத்துடனும் மானத்துடனும் வாழ்வதற்கும் பணத்தின் தேவை கூடிவிடும். பணம் இன்றியமையாததாகிவிடும்.

அப்போது வறிய நிலையிலும், பணம் இல்லாமலும் இருப்பவர்கள் மானத்தை மட்டுமல்லாமல் மார்க்கத்தையும் நம்பிக்கையையும் விற்க வேண்டிய நிலைக்காளாகி விடுமோ என்று அஞ்சுவார்கள்.

*26 ஆம் பக்கத் தொடர்ச்சி...*

அவர்களின் வியப்பை மட்டும் இலக்காக்கி கருத்துரை நல்கினான்.

**11.** இது அவர்களின் பேச்சுக்கான முதல் பதிலாகும். 'ஓ! அறிவிலிகளே! உங்களுக்குத் தான் புத்தி கெட்டுப் போய்விட்டது! உங்களின் உண்மையான நிலைமையைக் குறித்து எந்த மனிதர் உங்களை எச்சரிக்கின்றாரோ அவருடைய பேச்சைக் கேட்காமல் நேராக நரகத்தில் உங்களைக் கொண்டு போய்த் தள்ளிவிடக் கூடிய பாதையில் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருக்கின்றீர்களே!. அடடா! உங்களின் முட்டாள்த்தனத்தின் உச்சம் என்னவெனில், அந்த மோசமான கதிக்கு ஆளாவதிலிருந்து உங்களைக் காப்பாற்றுவதற்காக பரிதவிக்கின்ற மனிதரைப் பார்த்து பைத்தியக்காரர் என்று சொல்கின்றீர்களே!' என்று இதற்குப் பொருள்.

**12.** இது அவர்களின் பேச்சுக்கான இரண்டாவது பதில் ஆகும். இந்தப் பதிலைப் புரிந்து கொள்வதற்கு, மரணத்துக்குப் பின்னுள்ள வாழ்வை குறைஷி நிராகரிப்பாளர்கள் மறுத்து வந்ததற்கான காரணங்களில் மூன்று காரணங்கள் மிகவும் எடுப்பாக இருந்தன என்கிற யதார்த்தத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும். எடுப்பாக இருந்த அந்த மூன்று காரணங்களின் விவரம் வருமாறு:

(1) அவர்கள் இறைவனுக்கு முன்னால் நிறுத்தப்பட்டு, விசாரிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள அறவே மறுத்தார்கள். ஏனெனில் அதனை ஏற்றுக்கொண்டால் அதன் பிறகு இந்த உலகத்தில் மனம் போன போக்கில் வாழ்வதற்கான சுதந்தரமே பறிபோய்விடும் என்று அவர்கள் நினைத்தார்கள். (2) மறுமை நிகழ்வதையும் இந்த ஒட்டுமொத்தப் பேரண்டமும் தூள்தூளாகச் சிதறிப் போவதையும் மேலும் புதிதாக மறுபடியும் ஒரு பேரண்டம் உருவாவதையும் அவர்கள் கற்பனை செய்தும் பார்க்க முடியாததாக நினைத்தார்கள். (3) எவர்கள் மரணித்து பன்னூறு, பல்லாயிரம் ஆண்டுகளாகிவிட்டனவோ, எவர்களின் எலும்புகள் வரை மக்கி மண்ணாகி நிலத்திலும் காற்றிலும் நீரிலும் கரைந்தும் பறந்தும் கலந்தும் விட்டனவோ, அவர்கள் மீண்டும் அதே உடலுடனும் உயிருடனும் எழுப்பப்படுவது அந்தக் குறைஷி நிராகரிப்பாளர்களைப் பொறுத்த வரை முற்றிலும் சாத்தியமே இல்லாததாக இருந்தது. இங்கு மேலே தரப்பட்ட பதில் இந்த மூன்று அம்சங்களையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது. அதற்கும் மேலாக அவற்றோடு கூடவே கடுமையான எச்சரிக்கை ஒன்றையும் கொண்டதாக இருக்கின்றது. இந்தக் கருத்துச் செறிவான, சுருக்கமான வாசகங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளவற்றின் முழுமையான விவரங்கள் வருமாறு:

(1) இந்த வானத்தையும் பூமியையும் எப்போதேனும் நீர் கண்களைத் திறந்து பார்த்தீர்களேயானால் இது ஏதோவொரு விளையாட்டுப் பொருளும் அல்ல; மேலும், இது தற்செயலாகவும் உருவாகிவிடவில்லை என்பது உங்களுக்குத் தெளிவாகிவிடும். நினைத்ததைச் செய்து முடிக்கின்ற, சர்வ வல்லமை படைத்த ஒருவன் உச்சபட்ச விவேகத்தோடும் ஞானத்தோடும் இதனைப் படைத்துள்ளான் என்பதற்கு இந்தப் பேரண்டத்தில் இருக்கின்ற ஒவ்வொரு பொருளுமே சான்று பகர்கின்றன. இந்த அளவுக்கு ஞானமும் விவேகமும் செறிந்த முறையில் கட்டமைக்கப்பட்ட பேரண்டத்தில் ஒருவருக்கு அறிவும், பிரித்தறிகின்ற திறனும் அதிகாரங்களும் தரப்பட்ட பிறகு அவர் எந்தப் பொறுப்பற்றவராக, யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய கடமையற்றவராக விட்டு விடப்படுவார் என்று நினைப்பதே முழுக்க முழுக்க அபத்தமான, வீண் பேச்சாகும்.

(2) பேரண்டத்தின் இந்தக் கட்டமைப்பைக் கண் திறந்து பார்க்கின்ற எவரும் மறுமை நிகழ்வது கொஞ்சமும் சிரமமான காரியமல்ல என்பதைத் தெரிந்து கொள்வார். இந்தப் பூமியும் வானங்களும் எத்தகைய கட்டுகளைக் கொண்டு நிறுவப்பட்டிருக்கின்றனவோ அவற்றில் சின்னதாக இங்கு ஒரு பிறழ்வு அங்கு ஓர் அசைவு நிகழ்ந்துவிட்டாலே அந்தக் கணத்திலேயே உடனடியாக மறுமை நிகழ்ந்துவிடும். இன்று எவன் இந்தப்

பேரண்டத்தைப் படைத்திருக்கின்றானோ அவனால் மறுபடியும் மற்றுமோர் பேரண்டத்தைப் படைக்க முடியும் என்பதற்கு இந்தப் பேரண்டத்தின் இந்தக் கட்டமைப்பும் சான்றாகும். மறுபடியும் மற்றுமோர் பேரண்டத்தைப் படைப்பது அவனுக்குச் சிரமமானதெனில் இதே பேரண்டத்தை அவன் படைத்து நிற்க வைத்தது எப்படி?

(3) இந்தப் பூமியையும் வானங்களையும் படைத்தவனைக் குறித்து நீங்கள் என்னதான் நினைத்து வைத்திருக்கின்றீர்கள்? இறந்து போன மனிதர்களை மறுபடியும் படைக்கின்ற வல்லமை அவனுடைய ஆற்றலுக்கும் சக்திக்கும் அப்பாற்பட்டதாக நினைக்கின்றீர்களே! இறந்து போகின்ற மனிதர்களின் உடல் சின்னாபின்னமாகச் சிதறி, மண்ணோடு மண்ணாகிப் போனாலும், இங்குமங்கும் சிதறிவிட்டாலும் இதே பூமியின், இதே வானங்களின் எல்லைகளுக்குள்தானே இருக்கும்? அவற்றுக்கு அப்பால் எங்கேனும் போய் விடுவதில்லைதானே!

பிறகு எந்த இறைவனுக்கு இந்தப் பூமியும் வானங்களும் சொந்தமோ அவனுக்கு இந்த மண்ணிலும், காற்றிலும், நீரிலும் எந்தெந்தப் பொருள்கள் எங்கெங்கே சிதறிக் கிடந்தாலும் அவையனைத்தையும் அங்கிருந்து வெளிக் கொணர்வதில் என்ன சிரமம் இருக்கப் போகின்றது? உங்களுடைய உடலில் இப்போது என்னவெல்லாம் இருக்கின்றனவோ அவையனைத்தும் அவனால் ஒன்று திரட்டப்பட்டவை தாம்; இதே மண்ணிலிருந்தும் காற்றிலிருந்தும் நீரிலிருந்தும் பெறப்பட்டவைதாம். இந்தப் பகுதிகளை ஒன்று சேர்ப்பது இன்று சாத்தியம் எனில் நாளை அது ஏன் சாத்தியமற்றதாய் ஆகிவிடும்?

இந்த மூன்று சான்றுகளுடன் இந்த வசனத்தில் எச்சரிக்கை ஒன்றும் பொதிந்துள்ளது. அதாவது, நீங்கள் திரும்புகின்ற திசையெல்லாம் இறைவனின் இறைமையில் சூழப்பட்டிருக்கின்றீர்கள். நீங்கள் எங்கே சென்றாலும் இதே பேரண்டம்தான் உங்களைச் சூழ்ந்திருக்கும். இறைவனுக்கு எதிராக உங்களால் எந்தவொரு புகலிடத்தையும் தேடி அடையவே முடியாது. மேலும் இறைவன் எப்போது வேண்டுமானாலும் உங்களுடைய கால்களுக்குக் கீழிருந்தோ அல்லது உங்களின் தலைக்கு மேலிருந்தோ எந்தவொரு வேதனையை வேண்டுமானாலும் இறக்கி விடுகின்ற பேராற்றல் படைத்தவனாக இருக்கின்றான்.

தாயின் மடியைப் போன்று எந்த நிலத்தில் நீங்கள் மன நிம்மதியை அடைகின்றீர்களோ, மிகவும் மனநிறைவோடும் எந்தவிதமான கவலையும் இல்லாமலும் அதில் உங்களுக்காக வீடு ஒன்றைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருக்கின்றீர்களோ, அதன் மேற்பரப்புக்கு கீழே என்னவிதமான ஆற்றல்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதையும் எப்போது அது ஏதேனுமோர் நிலநடுக்கத்தை உண்டாக்கி அதே நிலத்தை நீங்கள் மீளாத் துயில் கொள்கின்ற உங்களுக்கான மண்ணறையாக ஆக்கிவிடுமோ என்பதையும் நீங்கள் அறிய மாட்டீர்கள்.

நீங்கள் எந்த வானத்தின் கீழ் முழு மன நிறைவோடும் கவலையில்லாமலும் அதனை உங்களின் வீட்டுக்கூரையாக நினைத்து நடமாடிக் கொண்டிருக்கின்றீர்களோ, அதே வானத்திலிருந்து திடீரென இடி வந்து உங்கள் மீது எப்போது விழும் என்பதும், எப்போது பெருமழை பொழிந்து பேரழிவை ஏற்படுத்தும் என்பதும், வேறு ஏதேனும் நீங்கள் அது வரை கேள்விப்பட்டிராத ஆபத்து உங்கள் மீது வந்து விழுமோ என்பதும் உங்களுக்குத் தெரியுமா, என்ன?

இந்த நிலையில் இறைவன் மீதான உங்களின் இந்த அச்சமற்ற போக்கும், எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படுவது தொடர்பான உங்களின் இந்த அலட்சியமும், மேலும் உங்களின் நலன் நாடுகின்றவரின் அறிவுரையை வெற்று வார்த்தைவீச்சுகளோடும் வீண் ஜம்பம் அடிக்கின்ற தொனியிலும் நீங்கள் எதிர்கொள்ளும் விதமும் சொல்கின்ற செய்திதான் என்ன? உங்களின் மோசமான கதிக்கு நீங்களே அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கின்றீர்களா, என்ன?

*(தொடரும்)*



● புதுக்கோட்டை
மு.ஜாகீர் உசேன்

# மக்கள் சேவையே மகத்தான சேவை

மனித வாழ்க்கையை முழுமையாக வழிநடத்த இறைவனால் அருளப்பட்ட மார்க்கம் இஸ்லாம். அதன் அடிப்படைக் கொள்கை அல்லாஹ் ஒருவனை மட்டுமே வழிபடுவதும், அவனுடைய படைப்புகளுக்கு நன்மை செய்தலுமாகும். மதப் பரவலுக்கான கருவியாக இல்லாமல் பிறருக்குச் சேவைகள் செய்வதை ஈமானின் (இறைநம்பிக்கையின்) ஒரு பகுதியாகவும், வழிபாட்டில் ஒரு கூறாகவும் இஸ்லாம் வைத்துள்ளது. இஸ்லாத்தில் மக்கள் சேவை (Service to Humanity) என்பது இறைக்கட்டளையாகும்.

அல்லாஹ் திருமறையில் கூறுகிறான்: 'அல்லாஹ் உனக்கு வழங்கியுள்ள செல்வத்தின் மூலம் மறுமையின் வீட்டைப்பெற அக்கறை கொள்; மேலும் இம்மையிலும் உனது பங்கை மறந்துவிடாதே! மேலும், அல்லாஹ் உனக்கு உதவி செய்திருப்பது போல் நீயும் உதவி செய்' (திருக்குர்ஆன் 28:77)

அல்லாஹ் நமக்குச் செய்த அளவிலா நன்மைகளுக்கு நன்றி செலுத்தும் வழி, மற்றவர்களுக்கு நன்மை செய்வதுதான். ஒருவரின் நன்மை உணர்வு சமூகம் முழுவதிலும் பரவ வேண்டும் எனக் கற்பிக்கிறது இஸ்லாம்.

## மக்கள் சேவை ஈமானின் வெளிப்பாடு

ஓர் உண்மையான முஸ்லிம் என்பவர் தனது ஈமானில் மட்டுமின்றி, பிறருக்கு நன்மை செய்வதிலும் முந்தியவராக இருப்பார். நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'மக்களில் சிறந்தவர், பிறருக்கு மிகவும் நன்மை செய்பவரே' (அல்-முஜம்அல் அவ்ஸத் - 5787)

**மக்களில் சிறந்தவர்:** இந்த நபிமொழி தனிப்பட்ட சிறப்பையோ அல்லது பிறப்பால் வரும் மேன்மையையோ குறிக்கவில்லை.

**நன்மை செய்பவர்:** ஒரு மனிதரின் உண்மையான மதிப்பு, அவர் மற்ற மனிதர்களுக்கு எவ்வளவு உதவியாக இருக்கிறார், எவ்வளவு நன்மைகளைச் செய்கிறார் என்பதில்தான் உள்ளது என்பதை இந்த வாசகம் வலியுறுத்துகிறது.

**இறைவனின் அன்பு:** மக்களுக்குத் தொண்டு செய்வது, உதவி செய்வது, நன்மையை நாடுவது போன்ற செயல்கள் இறைவனுக்கு மிகவும் விருப்பமானவை.

மனிதநேயம், சமூகப் பொறுப்பு, பொதுநலன் கருதுதல், பிறருக்கு உதவும் நற்பண்புகளின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. மேலும் மக்களுக்கு நன்மை செய்வது ஒரு சமூகக் கடமை மட்டுமல்ல, அது நம் ஈமானின் அடையாளம் என்பது தெளிவாகிறது.

## கருணையும் உதவியும்

‘நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களை நேசிக்கிறான்’ (திருக்குர்ஆன் 2:195)

ஒரு ஏழைக்கு உணவு கொடுப்பது, நோயாளியைச் சந்தித்து ஆறுதல் அளிப்பது, அநாதைக்கு உதவுவது, மனச்சோர்வுற்றவருக்கு ஆறுதல் கூறுவது ஆகியவை அனைத்தும் அல்லாஹ்வின் நேசத்தைப் பெறும் வழிகளாகும்.

படைப்புகளிடத்தில் இரக்கம் காட்டுவது நன்மையான செயல்களின் ஒரு பகுதியாகும். நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஆஸ் கூறுகின்றார்: ‘இரக்கம் காட்டுபவர்கள் மீதே அளவற்ற அருளாளன் (அல்லாஹ்) இரக்கம் காட்டுவான். நீங்கள் பூமியில் உள்ளவர்கள் மீது இரக்கம் காட்டுங்கள்; வானத்தில் உள்ளவன் (அல்லாஹ்) உங்கள் மீது இரக்கம் காட்டுவான்’

இந்த நபிமொழி இஸ்லாத்தின் மிக முக்கியமான நற்பண்புகளில் ஒன்றான இரக்கத்தின் அவசியத்தை வலியுறுத்துகிறது. மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் அனைத்துப் படைப்பினங்கள் மீதும் இரக்கமும் கருணையும் காட்டுவதன் மூலம், சர்வலோக இரட்சகனான அல்லாஹ்வின் இரக்கத்தையும் அருளையும் பெற முடியும் என்பதை இது தெளிவுபடுத்துகிறது. ஒருவர் மற்றவர்களிடம் எவ்வளவு கருணையாக நடந்துகொள்கிறாரோ, அதற்கேற்ப அல்லாஹ்வும் அவரிடம் கருணையாக நடந்துகொள்வான் என்ற அடிப்படைப் போதனையை இது வழங்குகிறது.

## சமூக ஒற்றுமையின் அடித்தளம்

இஸ்லாம், சமூகத்தில் ஒற்றுமையையும் சமத்துவத்தையும் வலியுறுத்துகிறது.

‘எப்பணி நல்லதாகவும் இறையச்சத்திற்கு உரியதாகவும் உள்ளதோ அதில் எல்லோருடனும் ஒத்துழையுங்கள்! ஆனால் எது பாவமானதாகவும், வரம்பு கடந்ததாகவும் உள்ளதோ அதில் எவருடனும் ஒத்துழையாதீர்கள்’ (திருக்குர்ஆன் 5:2)

மிக ஆழமாகச் சிந்திக்கவேண்டிய வசனம் இது. இந்த வசனத்தில் அல்லாஹ் நன்மை செய்வதையும், சமூக ஒற்றுமையையும் இறை அச்சத்துடன் சேர்த்தே சொல்கிறான்.

- **நன்மை, இறையச்சத்தில் உதவுதல்:** நல்ல காரியங்களில், உதாரணமாக தர்மம் செய்வது, தேவைப்படுபவர்களுக்கு உதவுவது போன்ற செயல்களில் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும் என்று இவ்வசனம் கூறுகிறது.

- **பாவத்திலும் பகைமையிலும் உதவக் கூடாது:** தீய காரியங்கள், குற்றங்கள், வரம்பு மீறல் போன்ற செயல்களில் ஒருவருக்கொருவர் உதவக்கூடாது என்றும், அப்படிச் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் இவ்வசனம் அறிவுறுத்துகிறது.

- **அல்லாஹ்வை அஞ்சுதல்:** இவை அனைத்திற்கும் அடிப்படையாக, அல்லாஹ்வை அஞ்சி, அவனது கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

இது சமூக அமைதி, சகோதரத்துவம், ஒற்றுமையின் அடிப்படை வாக்கியமாகும். இதை மார்க்கத்தோடு இணைக்கிறது இஸ்லாம்.

## மக்கள் சேவையின் உன்னத முன்னுதாரணம்

நபி(ஸல்) அவர்கள் தங்களின் வாழ்நாள் முழுவதும் மக்களுக்குத் தொடர்ந்து நன்மைகள் செய்துகொண்டே இருந்தார்கள். பசி, பட்டினியால் வாடியவர்களுக்கு உணவு ஏற்பாடு செய்தார்கள். நோயாளிகளுக்கு

ஆறுதல் கூறினார்கள், அநாதைகளுக்கு ஆதரவு, பாதுகாப்பு வழங்கினார்கள். அடிமைகளை விடுதலை செய்தார்கள். பெண்களுக்கு உரிய மரியாதைகளையும், உரிமைகளையும் கண்ணியத்தையும் உறுதி செய்தார்கள்.

நபி(ஸல்) அவர்களது வாழ்க்கைதான் 'மக்கள் சேவையே மகத்தான சேவை' என்பதற்கான சான்று. இந்தக் கருத்தியலை மிகச் சரியாகப் புரிந்து கொண்டதன் விளைவாக வெள்ளம், சுனாமி, கொரோனா போன்ற பேரிடர் காலங்களில் மதங்களைக் கடந்து மனிதநேயப் போராளிகளாக முஸ்லிம்கள் ஆர்வமாக மக்கள் சேவையாற்றுவதைக் காணலாம்.

நபி(ஸல்) அவர்களது வாழ்க்கைதான் 'மக்கள் சேவையே மகத்தான சேவை' என்பதற்கான சான்று. இந்தக் கருத்தியலை மிகச் சரியாகப் புரிந்து கொண்டதன் விளைவாக வெள்ளம், சுனாமி, கொரோனா போன்ற பேரிடர் காலங்களில் மதங்களைக் கடந்து மனிதநேயப் போராளிகளாக முஸ்லிம்கள் ஆர்வமாக மக்கள் சேவையாற்றுவதைக் காணலாம்.

இதில் உளத்தூய்மையோடு கூடிய பணிகளை எல்லாம் வல்ல இறைவன் முழுமையாக ஏற்றுக் கொள்கின்றான். நன்மைக்கு ஈடு மறுமை நற்பேறுகள் என்று அல்லாஹ் கூறுகிறான்: 'உங்கள் மறுமை நலன்களுக்காக நற்செயல் எதையேனும் நீங்கள் சம்பாதித்து முன்னரே அனுப்பி இருந்தால் அதனை அல்லாஹ்விடம் நீங்கள் காண்பீர்கள்' (திருக்குர்ஆன் 2:110)

இவ்வசனம் ஒவ்வொரு சிறிய நற்பணியையும் அதாவது உதவி, அன்பு செலுத்துதல், தியாகம் அனைத்தும் மறுமையில் நம்மை மகிழ்ச்சியாக்கும் என்பதை உறுதி செய்கிறது.

## இளைஞர்களுக்கு ஓர் அழைப்பு

இன்றைய சமூக அமைப்பு, பிரச்னைகளில் மக்கள் சேவைக்கான தேவைகள் மிக அதிகமாக இருக்கின்றது. ஏழை மாணவர்களுக்குக் கல்வி உதவி, நோயாளிகளுக்கு மருத்துவ உதவி, மாற்றுத் திறனாளிகளுக்கான தேவைகளை நிறைவேற்றுதல், சுற்றுச்சூழல் பராமரிப்பு, பாதுகாப்பு, மன அழுத்தத்தில் உள்ளவர்களுக்கு ஆறுதல் அளித்தல், சமூக வேற்றுமைகளைக் களைந்து இணக்கத்தை ஏற்படுத்துதல் இவை அனைத்தும் அல்லாஹ்வின் பாதையில் சேவை செய்வது ஆகும். எனவே இளைஞர்கள் தேவை உணர்ந்து, இயக்கமாக பொதுச்சேவைகளாற்ற வேண்டும்.

இஸ்லாம் மனிதநேயத்தை உயர்த்திப் பிடிக்கும் மார்க்கமாகும். மனிதனின் மதிப்பு, அவன் பிறருக்கு அளிக்கும் நன்மை, சேவைகளால் அளவிடப்படுகிறது. நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கை மனித சமூகத்துக்கான முழுமையான வழிகாட்டியாகும். அவர்கள் வாழ்வில் துன்பத்திலும், இன்பத்திலும், தன் சமூக மக்களுக்கும் எதிரிகளுக்கும் சமமாக நன்மை செய்தவர்களாகத் திகழ்ந்தார்கள். இதுவே உண்மையான மக்கள் சேவையின் பரிமாணம்.

எனவே, ஒவ்வொரு முஸ்லிமும் தமது திறன், நிலை, வாய்ப்பு வசதிகளுக்கேற்ப பிறருக்கு உதவி செய்து, சமுதாயத்தில் ஒற்றுமை, இரக்கம், அன்பு, நீதி ஆகியவற்றை நிலைநாட்ட வேண்டும். 'மக்கள் சேவையே மகத்தான சேவை' என்பது ஒரு மனிதனின் நற்குணத்திற்கான அடையாளம் மட்டுமல்ல, அது இஸ்லாமிய வழிபாட்டின் ஒரு வடிவமும், அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் வழியுமாகும்.

மக்கள் சேவை என்பது வெறும் உலக நன்மை மட்டுமல்ல; அது மறுமை வெற்றிக்கான திறவுகோல், அல்லாஹ்வின் நேசத்தையும் அருளையும் பெறும் பாதையாகும். நபி(ஸல்) அவர்களின் வழியைப் பின்பற்றும் அடையாளமுமாகும் என்பதை உணர்ந்து ஒவ்வொருவரும் தம் வாழ்வின் ஒரு பகுதியை சமூக நலனுக்காக அர்ப்பணிப்பதே இஸ்லாமிய வாழ்க்கையின் சிறப்பும், நம்பிக்கையின் நிறைவும் ஆகும்.

# நாளைத் தீர்மானிக்கும் காலை

**- ஹாஜா மாலிக்**

**கா**லை எழுந்தவுடன் நீங்கள் செய்யும் முதல் செயல்தான் அந்த நாளை எந்தத் திசையில் எடுத்துச் செல்லப் போகிறீர்கள் என்பதைக் காட்டும் அளவுகோல்!

காலை நேரம் என்பது ஒரு புதிய பக்கம். முதல் நாள் ஏற்பட்ட தோல்வி, கவலை, மன அழுத்தம் எல்லாவற்றையும் பின் வைத்து ஒரு புதிய தொடக்கம் செய்யும் அரிய நேரம்.

நீங்கள் காலை எழுந்தவுடன் அலைப் பேசியைத் திறந்து மற்றவர்களின் செய்தி களைப் பார்க்கிறீர்களா? அப்படியானால் நீங்கள் மற்றவர்களின் வாழ்க்கையை வாழ் கிறீர்கள். ஆனால் நீங்கள் எழுந்தவுடன் உங்கள் வாழ்க்கையைப் பற்றி சிந்திக்கிறீர்களா? அப்படியானால் நீங்கள் உங்களையே உருவாக் கிக் கொண்டிருக்கின்றீர்கள்.




ஒவ்வொரு காலையும் சில நிமிடங்கள் உங்களுடனே நீங்கள் பேசிக்கொள்ளுங்கள். ‘இன்று என்ன புதிதாகச் செய்யலாம்?’, ‘என்ன சவால்களை வெல்லலாம்?’ என்ற கேள்விகள் உங்களை முன்னேற்றும். இன்று எந்த வேலைகள் செய்ய வேண்டும் என்பதைக் குறிப்பு எடுத்துக் கொள்ள வேண்டும்.

Alibaba.com நிறுவனர் ஜாக் மா தனது வாழ்க்கையின் தொடக்கத்தில் பல தோல்வி களைச் சந்தித்தார். ஹார்வர்டில் பத்து முறை நிராகரிக்கப்பட்டவர். ஆனால் அதைப் பற்றிக் குறை கூறவில்லை. காரணம், அவர் ஒவ்வொரு காலை எழுந்ததும், ‘இன்னும் ஒரு நாள் உண்டு. முயற்சி செய்யலாம்’ என்ற மனநிலையை உருவாக்கிக் கொண்டார்.

அந்தக் காலை எண்ணம் அவரை உலகின் பெரிய நிறுவனங்களுள் ஒன்றான Alibabaவின் நிறுவனராக மாற்றியது.

*ஃபஜ்ர் தொழுகை -* அல்லாஹ்வின் அருளைப் பெறும் முதல் வாய்ப்பு.

*துஆ, திக்ர் -* மன அமைதி, நம்பிக்கையை வலுப்படுத்தும் சக்தி.

நபிகள் நாயகம்(ஸல்) கூறினார்கள்: ‘ஒரு மணி நேரச் சிந்தனை, ஓராண்டு வணக்கத்திற்கு ஒப்பானது’. காலை நேரத்தில் செய்யப்படும் திட்டம், நாள் முழுவதையும் ஒழுங்காக்கும். ஒரு சிறிய நடை அல்லது சுவாசப் பயிற்சி கூட உங்கள் மூளைச் செயல்பாட்டைத் துல்லிய மாக்கும்.

நீங்கள் நாளை வெற்றியடைவீர்கள் என்று யாரும் உறுதி சொல்ல முடியாது. ஆனால் நீங்கள் இன்று நேர்மறை மனநிலையில் தொடங்கினால், தோல்வியும் உங்களுக்குப் பாடம் கற்றுத் தரும்.

நம்மில் பெரும்பாலோர் காலை எழுந்தவுடன் தளர்ச்சி, அலுப்பு, சோர்வு அடைகின்றோம். ஆனால் நம்மால் அதை மாற்ற முடியும். நம்பிக்கையுடன் தொடங்கும் காலை ஒரு பெரிய மாற்றத்திற்கான முதல் அடி. ஒரு வெற்றியாளர், ஒரு சாதாரண மனிதர் இருவருக்கும் இடையிலான வேறுபாடு, ‘காலை நேரத்தை எப்படிப் பயன்படுத்துகிறோம்?’ என்பதில்தான் இருக்கிறது.

ஒரு நல்ல காலைப் பழக்கம் தொழுகை, திருக்குர்ஆன் ஓதுவது, படிப்பு, திக்ர் ஆகும். அந்த நாளுக்கான குறிக்கோள் திட்டமிடல் உங்கள் நாள் முழுவதையும் சிறப்பாக்கும்.

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘அல்லாஹ் என் உம்மத்துக்கு காலை நேரத்தில் பரக்கத்தைக் கொடுத்துள்ளான்’ (திர்மிதி ஹதீஸ், 1212) அதாவது, ஒருவர் காலை நேரத்தில் செயலில் இறங்கினால் அல்லாஹ்வின் அருளும் அன்பும் அவருக்கு அதிகம் கிடைக்கும்.

ஒரு மனிதன் தனது நாளை அல்லாஹ்வை நினைத்துத் தொடங்கினால், அவரது நாள் சுத்தமும், மனத் தெளிவும் உடையதாக இருக்கும். செயல்கள் சிறப்பு பெறும்.

அல்லாஹ் கூறுகிறான்: ‘மேலும், அவர்களுடைய உள்ளங்கள் அல்லாஹ்வை நினைவுகூர்வதால் நிம்மதியடைகின்றன’ (திருக்குர்ஆன் 13:28) அதுவே நம் வாழ்வின் வெற்றியின் அடிப்படை.

நாள் முழுவதும் நீங்கள் சிந்திக்க, முடிவெடுக்க, செயல் படைக்க, எல்லாவற்றுக்கும் அடிப்படைச் சக்தி அதே காலைப் பழக்கத்தில்தான் உள்ளது. உங்கள் காலை சிறப்பாக இருந்தால், உங்கள் வாழ்க்கையும் சிறப்பாக இருக்கும். நீங்கள் ஒவ்வொரு நாளையும் ஒரு புதிய தொடக்கமாகக் காணுங்கள். உங்கள் வெற்றி, உங்கள் வாழ்க்கை இரண்டும் உங்கள் காலை முடிவுகளில்தான் தொடங்குகின்றன.


www.samarasam.net

# சமரசம்

மாதம் இருமுறை இதழ்

₹25

46 ஆண்டுகளைக் கடந்து
இதழியல் பயணத்தில்
முத்திரை பதித்த முன்னோடி இதழ்

சிறப்புச் சலுகை

ஜனவரி மாதம்
முழுவதும்

ஆண்டுச் சந்தா ~~550~~
450 ரூபாய் மட்டுமே




விருப்பு வெறுப்பற்ற
நேர்கொண்ட பார்வை

தேன் தமிழில் தீன் மணக்கும்
திங்களிருமுறை இதழ்




எல்லாருக்குமான இதழ்
எல்லாம் நிறைந்த இதழ்

வங்கி விவரம் :

**Creative Communication Chennai**
**A/c No. 30705346015**
**State Bank of India, Jamalia Branch,**
**IFS Code - SBIN0014623**
**Gpay : 9566153142**

தொடர்புக்கு :

**சமரசம்**
**138, IFT லேன், பெரம்பூர் நெடுஞ்சாலை,**
**சென்னை 12.**
• 044-2662 0091 • 95661 53142
• samarasam12@gmail.com
• www.samarasam.net

இன்றும் நம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு முன்மாதிரியான மனிதரைப் பற்றிய பதிவு இது. அவர் உலகக் கோடீஸ்வரர்களில் ஒருவர்; அரபு உலகின் முன்னணித் தனவந்தர்களில் குறிப்பிடத்தக்கவர். சுமார் எழுநூறு கோடி அமெரிக்க டாலர் பெறுமதி வாய்ந்த சொத்துகளுக்குச் சொந்தக்காரர். அவர் தான் சவூதி அரேபியாவில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் சுலைமான் அல் ராஜிஹி அவர்கள்.

நேற்று வரை வர்த்தக உலகின் ஒரு ஜாம்பவானாக இருந்த இவர் தற்போது சொத்து, செல்வங்கள் எதுவுமில்லாத மிகச் சாதாரண ஒரு மனிதராக மாறி இருக்கிறார். காரணம், இவர் சில ஆண்டுகளுக்கு முன்னர் தனது மொத்த சொத்துகளையும் பகிர்ந்தளித்து விட்டார்; தமது செல்வத்தில் ஒரு பெரும் பகுதியைச் சன்மார்க்க, சமூக, மனிதநேயப் பணிகளுக்காக வக்ஃப் செய்தார். அந்த வக்ஃப் - தர்ம நிதியத்தைப் பரிபாலிக்கும் பணிகளைத் தானே முன்னின்று செய்து வருகின்றார்.

# சரித்திரம் படைக்கும் ஒரு சாதனை நாயகன்

- அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது

வக்ஃப் இஸ்லாமிய உலகில் மிகப்பெரிய தர்ம நிதியமாக விளங்குகின்றது. தனது சொத்தில் எஞ்சிய பகுதியைத் தனது வாரிசுகள் மத்தியில் பகிர்ந்தளித்துள்ளார். தனது முழுச் செல்வத்தையும் இவ்வாறு பகிர்ந்தளித்தது தொடர்பாக 2012ஆம் ஆண்டு ஒரு பத்திரிகையாளர் வியப்போடு அவரிடம் வினவிய போது அவர் சொன்ன பதில்:

‘இதில் வியக்க என்ன இருக்கின்றது? உண்மையில் சொத்து, செல்வங்கள் அடிப்படையில் நமக்குச் சொந்தமானவை அல்ல. அவை அல்லாஹ்வுக்குச் சொந்தமானவை. நாம் வெறும் பொறுப்பாளர்கள்; நிர்வகிப்பவர்கள் மட்டுமே. இப்போது நான் அணியும் துணிகள் மட்டுமே எனக்குச் சொந்தமானவையாக இருக்கின்றன. ஏனைய அனைத்து சொத்துகளையும் பங்கு வைத்து விட்டேன். அதனைக் கொடுத்து மகிழ்ச்சி அடைகிறேன்; மன நிறைவோடும் இருக்கின்றேன்.’



■ சுலைமான் அல் ராஜிஹி

சுலைமான் அல் ராஜிஹி 1928ஆம் ஆண்டு பிறந்தவர். இவர் தனது இளமைக் காலத்தில் கடும் வறுமையில் வாழ்ந்தவர். மண்ணெண்ணை விற்பவராக, சுமை தூக்குபவராக, சமையல்காரராக, காவல்காரராக, சிறு தொகை சம்பளத்துக்குத் தொழில் செய்பவராக, ஒரு சிறு மளிகைக்கடை வைத்து வியாபாரம் செய்பவராக இருந்தவர். பின்னர் சிறிய அளவில் நாணய மாற்றுத்தொழிலை (Money Exchange) தொடங்கினார். படிப்படியாக முன்னேறினார்.

பின்னர் அல் ராஜிஹி வங்கியை நிறுவினார். காலப்போக்கில் இது உலகின் முதற்தர இஸ்லாமிய வங்கியாக வளர்ச்சி கண்டது. தொடர்ந்து பல தொழில் முயற்சிகளைத் தொடங்கினார்; பல தொழிற்சாலைகளையும், பண்ணைகளையும் நிறுவினார். அவரது வர்த்தக சாம்ராஜ்யம் படிப்படியாக விரிவடைந்து கொண்டே சென்றது.

இவர் தனது அனைத்துத் தொழில் முயற்சிகளையும் ஹலால் - ஹராம் வரையறைகளைப் பேணியும் வியாபார தர்மங்களைப் பேணியும் அமைத்துக் கொண்டார் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விஷயமாகும். அதே போல இவர் என்றும் மிக மிக எளிமையாகவே வாழ்ந்து வந்திருக்கின்றார். பல விமான சேவைகளில் பங்குதாரராக இருந்த இவர், தனது பயணங்களுக்காகச் சொந்தமாக ஒரு ஜெட் விமானத்தைக்கூட வைத்திருக்கவில்லை. மாறாக எப்போதும் பொது பயணிகள் விமானங்களிலேயே பயணம் செய்வார்.

First Class அல்லது Business Classஇல் அவர் பயணம் செய்ததில்லை. எப்போதும் சாதாரண Economy classஇல் தான் பயணம் செய்வார். வியாபார நோக்கங்களுக்காக மட்டுமே வெளிநாடுகளுக்குப் பயணம் செய்வார். ஓய்வெடுக்கவோ அல்லது சுற்றுலா நோக்கமாகவோ அவர் வெளிநாடுகளுக்குச் சென்றதில்லை. தனது தொடக்ககால வறுமை நிலையை மறக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக முப்பது ஆண்டுகளாக ஒரு துணியை அவ்வப்போது அணிந்து வந்தார்.

இவரது சமூகப் பணிகளுக்கு அளவே இல்லை. தொடக்ககாலம் முதலே தனது வர்த்தகக் கம்பெனியில் சமூக சேவைகளுக்கான ஒரு தனியான பிரிவை அமைத்து அதற்கூடாக பல்வேறு பணிகளை முன்னெடுத்து வந்தார்.

அதன் பின்னர் தனது சொத்தில் மிகப் பெரிய ஒரு பகுதியை வக்ஃப் செய்து ஒரு தனியான தர்ம நிதியத்தை நிறுவினார். அதனை நிர்வகிக்கும் பொறுப்பையும் தானே



சுமந்து பல துறைசார் நிபுணர்களின் ஆலோசனையுடன் பெரும் பெரும் வர்த்தக முயற்சிகளையும் முடுக்கி விட்டார். இதனால் தற்போது தர்ம நிதியத்தின் பெறுமதி ஆயிரத்து அறுநூறு கோடி அமெரிக்க டாலர்கள் வரை உயர்ந்துள்ளதாக நம்பப்படுகின்றது. இது எவ்வளவு பெரிய தொகை!

பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், கலா பீடங்கள், ஹிப்ளு மதரஸாக்கள், மஸ்ஜித்கள் முதலானவற்றைத் தனது தர்ம நிதியத்துக் கூடாக நிறுவி நிர்வகித்து வருகின்றார். கல்வி, சுகாதாரம், ஊடகம், அழைப்பியல், நிவாரணம் ஆகிய துறைகள் உட்பட சமூகப் பணிகளில் பங்களிப்புச் செய்துவரும் நூற்றுக்கணக்கான தொண்டு நிறுவனங்களுக்கு இவரது நிதியம் பெரிய அளவில் உதவி வருகின்றது.

சுலைமான் அல் ராஜிஹி அவர்களின் சமூக, சமய, மனிதநேயப் பணிகளை அங்கீகரித்து, பாராட்டும் வகையில் 2012ஆம் ஆண்டு இவருக்கு மன்னர் பைஸல் உலகப் பரிசு வழங்கப்பட்டது.

‘நல்ல மனிதனிடம் இருக்கும் நல்ல செல்வமே சிறந்த செல்வமாகும்’ (ஹாகிம், பைஹகீ) என்ற நபிமொழிக்கு இலக்கணமாக விளங்குபவர் சுலைமான் அல் ராஜிஹி அவர்கள். அல்லாஹ் அவரையும் அவரது பணிகளையும் பொருந்திக் கொள்வானாக; அவரைப் போன்ற பரந்த உள்ளம் படைத்த மனிதர்களாக நம் அனைவரையும் ஆக்கி அருள்வானாக!

சிறுகதை

# உண்மையான சொத்து

- மலர்மதி

பெருநாள் நெருங்க, நெருங்க பதற்றம் தொற்றிக்கொண்டது அய்யூபுக்கு. அவன் மனைவி ஜாஹிதாவுக்கும் அதே கவலை.

அய்யூப் ஜாஹிதா தம்பதிக்கு நான்கு குழந்தைகள். மூன்று பெண், ஓர் ஆண். அதுவும் கடைக்குட்டி.

இவர்களை வளர்ப்பதே பெரும் பாடாகியிருந்தது. காரணம், அய்யூபுக்குச் சரியான வருமானமில்லை. தனியார் நிறுவனமொன்றில் செக்யூரிட்டி வேலை அவனுக்கு. எலெக்ட்ரிகல் வேலை தெரியும் என்பதால் அந்தப் பகுதி மக்கள் அவ்வப்போது அழைத்து சிறு, சிறு வேலைகள் தருவர். அதில் கிடைக்கும் சொற்ப வருமானமும் குடும்பச் செலவுக்குப் பயன்படும்.

பையனாவது முதலாவதாக பிறந்திருந்தால் சீக்கிரமா படித்து முடித்து வேலைக்குப் போயிருப்பான். கடைசியாகப் பிறந்திருக்கிறான். மூன்று பெண் பிள்ளைகளை வேறு கரையேத்தணும். அதை நினைத்தால்தான் 'பகீ' ரென்றிருக்கும்.

நல்லவேளை சொத்து பிரித்ததில் இந்த வீடு அவனுக்குக் கிடைத்தது. இல்லையென்றால், வாடகை வீட்டில் அல்லல் பட்டிருக்க நேர்ந்திருக்கும்.

பெருநாளுக்கு இன்னும் சரியாக ஒரு வாரம்தான் இருக்கிறது. குழந்தைகளுக்குப் புதுத் துணி எடுக்கவில்லை. அய்யூப் ஜாஹிதாவின் இப்போதைய கவலை இது தான்.

***

ஆக்டிவாவை போர்ட்டிகோவில் நிறுத்திவிட்டு சாவியை உருவிய முபாரக் படியேறி தன் வில்லாவில் நுழைந்தான்.

சாவியை டீபாயின் மேல் வைத்துவிட்டு, சோபாவில் சரிந்தான். மனைவி மெஹர் தேநீரைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு எதிர் சோபாவில் அமர்ந்தாள்.

'என்னங்க..! இறைவன் நமக்கு எல்லா வசதிகளும் கொடுத்திருக்கிறான். எந்தவித குறையுமில்லைன்னு சொன்னாலும், அந்த ஒரே ஒரு குறையை எண்ணி எண்ணி கவலைப்படாமல் என்னால இருக்க முடியலீங்க..'

சொல்லும்போதே அவளையும் அறியாமல் அவள் கண்கள் ஈரமாயின. காலிக் கோப்பையை வைத்துவிட்டு நிமிர்ந்தான் முபாரக்.

திருமணமாகி பதினைந்தாண்டுகள் ஓடிவிட்டன. ஆனால் இறைவன் அவர்களுக்குப் பிள்ளைச் செல்வத்தை வழங்கவில்லை. அதை நினைத்துத்தான் மெஹர் கவலை கொள்கிறாள்.

பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்யும் சிறிய தொழிற்சாலை ஒன்றை சொந்தமாக நிறுவி நடத்தி வருகிறான் முபாரக். மொத்தம் பத்துப் பேர் வேலை செய்யும் அந்தத் தொழிற்சாலை நல்ல லாபகரமாய் நடக்கிறது. நல்ல வசதியான வாழ்க்கைதான். எல்லாமிருந்தும் பயன் என்ன? மெஹருக்கு மட்டுமா அந்தக் கவலை? தனக்கும்தான். ஆனால், அதை வெளிக் காட்டுவதில்லை முபாரக்.

வழக்கம்போல் சில ஆறுதல் வார்த்தைகளை அள்ளி வீசினான். அவை ஒன்றும் வேலைக்காகாது எனத் தெரிந்தும்!

முந்தானையால் கண்களைத் துடைத்த மெஹர், ஏங்க எனக்கோர் ஆசை என்றாள்.

'சொல்லு?'

‘நமக்குன்னு நெருங்கிய சொந்தம் உங்க தம்பி ஒருத்தர்தானே? பெருநாளுக்கு அவர் குடும்பத்தை அழைத்தாலென்ன?’

‘சட்’டென அவள் மீது உக்கிரப் பார்வையை வீசினான்.

‘நீ என்ன சொல்றே மெஹர்? கடந்த பத்து வருஷமா எங்களுக்கிடையே பேச்சுவார்த்தை இல்லை. எனக்குச் சேர வேண்டிய வீட்டை அடாவடியாக தன் பெயருக்கு எழுதி வாங்கிக்கொண்டான்’

‘அதற்குப் பதிலாகத்தான் உங்களுக்கு நிலம் கிடைத்ததே?’

‘காலி நிலத்தை வைத்து என்ன பண்ணுவது?’

‘அந்த நிலத்தில்தானே தொழிற்சாலை கட்டி நடத்தறீங்க?’

‘வாஸ்த்தவம்தான். ஆனால், அதைக் கட்ட ஏகப்பட்ட செலவு ஆயிடுச்சே?’

‘இதோ பாருங்க, சின்னவங்க எப்போதும் கொஞ்சம் பிடிவாதக்காரர்களாகத்தான் இருப்பாங்க. பெரியவங்கதான் விட்டுக்கொடுத்துப் போகணும்’

‘இப்ப நீ என்ன சொல்ல வர்றே?’

‘இவ்வளவு பெரிய வீட்டில் நாம ரெண்டு பேர் மட்டுமே இருக்கிறோம். அதுவும் நீங்க அலுவலகம் புறப்பட்டுப்போன பிறகு இந்த வீடு மயான அமைதியில மூழ்கிப் போயிடுது. எனக்கு எப்படியிருக்கும்னு நீங்களே கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க.

மெஹரின் ஏக்கம் முபாரக்குக்குப் புரிந்தது.

***

‘அய்யூபால் தன் கண்களை நம்பமுடியவில்லை. அண்ணாவா தன் வீட்டைத் தேடி வந்திருக்கிறார்?

‘வாங்கண்ணா’ என முபாரக்கைக் கட்டித் தழுவி, உள்ளே அழைத்துப் போனான்.

ஜாஹிதாவின் கண்கள் வியப்பில் அகல விரிந்தன.

‘அஸ்ஸலாமு அலைக்கும். வாங்க. சவுக்கியமா?’ என நலம் விசாரித்தாள்.

குழந்தைகள் முபாரக்கை குழப்பமாய்ப் பார்த்தனர்.

‘ஆனாலும் இவ்வளவு பிடிவாதம் கூடாது உனக்கு. ஒரே ஒரு முறைகூட எட்டிப் பார்க்கலையே’ எனக் கடிந்து கொண்ட முபாரக், பெருநாளுக்கு குடும்பத்துடன் கண்டிப்பாக வர கட்டாயப் படுத்தினான்.

அய்யூப் திரும்பி ஜாஹிதாவைப் பார்த்தான். அவள் விழிகளில் சம்மதம் தெரிந்தது.

‘அவசியம் வர்றோம் அண்ணே’ என்றான் அய்யூப்.

‘இன்னொரு முக்கியமான விஷயம்’ என மேற்கொண்டு பேச இயலாமல் தயங்கினான் முபாரக்.



‘சொல்லுங்கண்ணே?’

‘அதை எப்படிச் சொல்றதுன்னுதான்..’

‘எதுவாக இருந்தாலும் தயங்காம சொல்லுங்கண்ணே’ என முபாரக்கை உசுப்பினான் அய்யூப்.

‘இவ்வளவு பெரிய செல்வந்தர் எதற்காகத் தயங்குகிறார்? என்ற குழப்பத்துடன் ஜாஹிதாவும் ஏறிட்டாள்.

‘இதோ பார் அய்யூப் எல்லாம் வல்ல இறைவன் எனக்கு சொத்து, சுகம், வசதி, வாய்ப்புகள் எல்லாம் வாரி வழங்கிவிட்டு ஒன்றை மட்டும் வழங்காமல் இருக்கிறான்.’

‘அது என்னண்ணே? என்று வெகுளியாகக் கேட்டான் அய்யூப்.

புரிந்துகொண்ட ஜாஹிதா, ‘என்னங்க நீங்க? உங்க அண்ணனும், அண்ணியும் குழந்தை பாக்கியத்துக்காக ஏங்குவது உங்களுக்குத் தெரியாதா?’ எனக் கடிந்து கொண்டாள்.

‘ஓ அது பத்தியா அண்ணே வருத்தப்படறீங்க?’ என்று கேட்டான் அய்யூப்.

‘ஆமாம் தம்பி. நீ மனசு வெச்சா எனக்கு உதவலாம்’

‘நானா? உதவியா? நீங்க என்ன சொல்றீங்க அண்ணே?’ புரியாமல் வினவினான்.

‘இறைவன் உனக்கு நான்கு குழந்தைங்களைக் கொடுத்திருக்கிறான். அல்ஹம்துலில்லாஹ்! இவங்களை வளர்த்து, ஆளாக்கி, படிக்கவைத்து, ஒருத்தனிடம் ஒப்படைக்கிற வரை எவ்வளவு சிரமங்கள் உள்ளன என்பது எனக்குத் தெரியும். நீ இருக்கிற நிலைமையில் இதெல்லாம் சாத்தியமா என்பது ஒரு கேள்விக்குறிதான்.’

> நீங்க அலுவலகம் புறப்பட்டுப்போன பிறகு இந்த வீடு மயான அமைதியில மூழ்கிப் போயிடுது. எனக்கு எப்படியிருக்கும்னு நீங்களே கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க.

அய்யூப் அமைதியாய் அண்ணனைக் கூர்ந்தான். முபாரக் தொடர்ந்தான்.

‘உன்னோட மூன்று பெண் பிள்ளைகளிலிருந்து ஒன்றை நாங்க தத்து எடுத்துக்கலாமுன்னு தீர்மானிச்சிருக்கோம். மேற்கொண்டு உங்கள் விருப்பம்’

கேட்ட மாத்திரத்தில் திடுக்கிட்டாள் ஜாஹிதா.

‘யோசித்துச் சொல்லுங்கள்!’

அய்யூபை அழைத்துக்கொண்டு உள் அறைக்குப் போனாள் ஜாஹிதா. நீண்ட நேர விவாதத்துக்குப் பிறகு வெளியே வந்தனர் அய்யூபும், ஜாஹிதாவும்.

‘உங்கள் விருப்பம்போல் மூணாவது பெண்ணைக் கொடுக்கிறோம்’ என்று அய்யூப் சொன்னதும், எழுந்து மகிழ்ச்சியுடன் அய்யூபைக் கட்டித் தழுவினான் முபாரக்.

தத்தெடுத்த பிள்ளையுடன் வீட்டை நோக்கித் திரும்பும் வழியில் காரை ஓட்டிக்கொண்டே முபாரக் சொன்னான்.

‘பார்த்தாயா மெஹர்? இத்தனை நாளும் வீடு, நிலம்தான் சொத்து என்று எண்ணிக் கொண்டிருந்த எனக்கு குழந்தைச் செல்வம்தான் உண்மையான சொத்து என உணர்த்திவிட்டான் இறைவன் இந்த விதத்தில் அய்யூப்தான் செல்வந்தர். அவன் முன் நான் ஒரு ஏழை!’

‘அப்படியெல்லாம் சொல்லாதீங்க. சில விஷயங்களை மனிதர்களுக்கு உணர்த்த, எல்லாம் வல்ல அல்லாஹ் சமயத்தில் இது போன்ற சூழ்நிலைகளை உருவாக்கி புரிய வைக்கிறான்’ என்றாள் மெஹர்.

அவள் சொல்வது உண்மைதான் என்பதைப் புரிந்து, தெளிந்தான் முபாரக்.

# வெனிசுலா மீதான அமெரிக்க இராணுவ நடவடிக்கை சர்வதேச சட்டத்தை மீறும் செயல்

### – ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்தியத் தலைவர் சையத் சஆதத்துல்லாஹ் ஹுசைனி கடும் கண்டனம்

வெனிசுலா மீது நடத்தப்பட்ட இராணுவத் தாக்குதல்களும், அந்நாட்டின் அதிபர் நிக்கோலஸ் மதுரோ கைது செய்யப் பட்டு, வலுக்கட்டாயமாக அமெரிக்காவிற்கு நாடு கடத்தப்பட்டிருப்பதும் ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம், சுதந்திர நாடுகளுக்கு இடை யிலான உறவுகளை நிர்வகிக்கும் அடிப்படை விழுமியங்களை வெளிப்படையாக மீறும் செயலாகும்.

ஐநா பாதுகாப்பு சபையின் அனுமதி இல்லாமலோ அல்லது தற்காப்புக்கான தெளி வான காரணங்கள் இல்லாமலோ பலப் பிர யோகம் செய்வது ஒரு ஆபத்தான முன்னு தாரணத்தை உருவாக்குகிறது. இது ஒருதலைப் பட்சமான இராணுவத் தலையீடுகளை இயல் பாக்க வழிவகுக்கும்.

இத்தகைய நடவடிக்கைகள் சர்வதேச ஒழுங்கை பலவீனப்படுத்துவதோடு சிறிய, பலவீனமான நாடுகள் சக்தி வாய்ந்த நாடுகளின் கட்டாயத்திற்கு ஆளாகும் சூழலை ஏற்படுத்து கிறது. சுமார் 300 பில்லியன் பேரல்கள் என மதிப்பிடப்பட்டுள்ள வெனிசுலாவின் பிரம் மாண்டமான எண்ணெய் வளத்தைக் குறிவைத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க டாலருக்குப் பதிலாக மற்ற நாணயங்களில் எண்ணெய் வர்த்தகம் செய்ய வெனிசுலா எடுத்த முயற்சிகள், அமெரிக்கா வின் பொருளாதார ஆதிக்கத்திற்கு விடுக்கப் பட்ட சவாலாகக் கருதப்பட்டதே தற்போதைய மோதலுக்கு முக்கியக் காரணம். குற்றச் சாட்டுகளையோ அல்லது அரசியல் கருத்து வேறுபாடுகளையோ ஒரு நாட்டின் மீது இராணுவப் படையெடுப்பு நடத்துவதற்கோ அல்லது ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கோ ஒரு சாக்காகப் பயன்படுத்த முடியாது.

இந்த நடவடிக்கை ஒரு ‘நவீன ஏகாதி பத்திய’ (Neo-imperialism) செயல். இது வெனிசுலாவை மட்டுமல்லாமல் ஒட்டு மொத்த லத்தீன் அமெரிக்க பிராந்தியத்தையும் சீர்குலைக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது. இத்தகைய தலையீடுகள் அமைதியையோ நீதியையோ நிலைநாட்டுவதற்குப் பதிலாக, நீண்டகால அமைதியின்மை, பொதுமக்கள் துயரம், ஜனநாயக நிறுவனங்களின் வீழ்ச் சிக்கே வழிவகுக்கும்.

சக்திவாய்ந்த நாடுகளின் இத்தகைய ஒருதலைப்பட்ச இராணுவ நடவடிக்கைகள், ஐநா சாசனத்தின் அடிப்படையிலான சர்வ தேச அமைப்பைப் படிப்படியாக சிதைத்து வருவது கவலை அளிக்கிறது. ஐநா பாது காப்பு சபையின் அவசரக் கூட்டத்தைக் கூட்டப் பல நாடுகள் விடுத்துள்ள கோரிக்கையை நாங்கள் வரவேற்கிறோம்.

பதற்றம் அதிகரிப்பதைத் தடுக்கவும், சர்வதேச சட்ட மீறல்களுக்குப் பொறுப்பேற்கச் செய்யவும் சர்வதேச அளவில் அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். எந்தவொரு நாட்டின் எதிர்காலத்தையும் அந்த நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும். வெனிசுலாவின் இறை யாண்மை, சுயநிர்ணய உரிமையை மதிப்பது அவசியம். அமெரிக்காவின் இந்த இராணுவ ஆக்கிரமிப்பை இந்தியா பகிரங்கமாக எதிர்க்க வேண்டும். பேச்சுவார்த்தை, சர்வதேச அமைப்புகள் மூலம் மோதல்களுக்கு அமைதித் தீர்வு காண இந்தியா குரல் கொடுக்க வேண்டும்.

அரசியல் முடிவுகளைத் திணிக்க ஏகாதி பத்திய ஆக்கிரமிப்புகள், பலப்பிரயோகம் செய்யப்படுவதை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் உறுதியாக எதிர்க்கிறது. ஒரு நியாய மான, நிலையான உலக ஒழுங்கிற்கு இறை யாண்மையை மதித்தல், சர்வதேச சட்டத்தைப் பின்பற்றுதல், அமைதிக்கான அர்ப்பணிப்பு ஆகியவை மிக அவசியமானவை.

# இஸ்லாமிய வெறுப்புக் குற்றங்கள்

- K. ரியாஸ்

## இடிக்கப்படும் மஸ்ஜிதுகள், மதரஸாக்கள்



உத்தரப்பிரதேச மாநிலம் சம்பலில் 2025 ஜனவரி 4ஆம் தேதி அதிகாரிகள் இரண்டு பள்ளிவாசல்கள், ஒரு மதரஸாவை இடித்துத் தள்ளினர். அவை அரசு நிலத்தில் சட்டவிரோதமாகக் கட்டப் பட்டதாகக் கூறி பலத்த போலீஸ் பாதுகாப் புடன் ட்ரோன் கண்காணிப்பின் கீழ் இடிக் கப்பட்டன. மஸ்ஜிதின் இமாமுக்கு ₹8.78 லட்சம் உட்பட மொத்தம் ₹58 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நடவடிக்கைக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட 20 பயனாளிகளுக்கு நிலம் ஒதுக்கப்பட்டது.

## அச்சுறுத்தல்



மும்பையின் விரார் பகுதியில் உள்ள டி-மார்ட் என்னும் கடையில் ஒரு முஸ்லிம் பெண் தனது மத அடையாளத்தின் காரணமாக ஒரு வாக்குவாதத்திற்குப் பிறகு அங்கிருந்த ஒருவர் அப்பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்வதாக மிரட்டியுள்ளார்.

## முஸ்லிம்கள் வெளியேற்றம்

மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர ஃபட்னாவிஸ் நிகழ்வு ஒன்றில் பேசுகையில், ‘பாஜக தலைமையிலான மகாயுதி அரசாங்கம் மும்பையிலிருந்து வங்காள தேச ஊடுருவல்காரர்களை அடையாளம் கண்டு நாடு கடத்தும், இது நகரத்தைப் பாதுகாப் பானதாக மாற்றும். கடந்த ஏழு மாதங்களிலேயே பல வங்காளதேசியர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். அனைத்து ஊடுரு வல்காரர்களும் நாடு கடத்தப்படும் வரை நாங்கள் இதைத் தொடர்வோம்’ என்று கூறினார்.



## வெறுப்புத் தாக்குதல்

பீகார் மாநிலம் முங்கரில் உள்ள கரக்பூரில் மேற்கு வங்காளத் தைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் தெரு வியாபாரி மத அடை யாளத்தால் வாய்மொழி யாகத் தாக்கப்பட்டு மேலும் வங்கதேசத்தில் இந்துக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதலை முன் னிறுத்தி அநாகரிகமான நடத்தைக்கு ஆளாக் கப்பட்டார்.



## தொடரும் தாக்குதல்கள்

2025 ஜனவரி 2 அன்று மேற்கு அகர்தல காவல் நிலையத்திற்கு வெளியே ஒரு கும்பல் ஆவேசமாக ஒன்றுகூடிச் சாலை களைத் தடுத்து காவல்துறைத் தடுப்புகளை அகற்றியது. முஸ்லிம் ரிக்ஷா ஓட்டுநர்மீது நடத்தப்பட்ட வகுப்புவாதத் தாக்குதலைத் தொடர்ந்து இது நடந்தது. முகமூடி அணிந்த ஒரு போராட்டக்காரர் ஆட்டோ ரிக்ஷாவின் கண்ணாடியை அடித்து ஓட்டுநரை மிரட்டு வதைக் காட்டும் வீடியோக்கள் வெளி யாகின.



பாதிக்கப்பட்டவரின் கூற்றுப்படி தாக்குதல் நடத்தியவர்கள் அவரைத் தடுத்து நிறுத்தி அவரது பெயரைக் கேட்டு அவர் ஒரு முஸ்லிம் என்பதை அறிந்ததும் அவரைத் தாக்கினர்.

### மத முழக்க அச்சுறுத்தல்

பீகாரின் மதுபனி மாவட்டத்தில் ஒரு முஸ்லிம் தொழிலாளி வங்காளதேசத்தைச் சேர்ந்தவர் என்று பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்டு ஒரு கும்பலால் தாக்கப்பட்டார். பாதிக்கப்பட்ட குர்ஷித் ஆலம், மத முழக்கங்களை உச்சரிக்க மறுத்ததால் சுமார் 50 பேர் தன்னைத் தாக்கியதாகவும் ஜெய் ஸ்ரீ ராம், ஜெய் சீதா ராம், பாரத் மாதா கி ஜெய் என்று சொல்லச் சொன்ன போது பாரத் கி ஜெய் என்று சொல்ல முடியும் என்று தான் சொன்னதாகவும் அவர் கூறினார்.



### ஆன்மிகப் போர்வையில் வகுப்புவாதம்

இந்தியன் பிரீமியர் லீக் 2026 சீசனுக்காகக் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் வங்கதேச கிரிக்கெட் வீரர் முஸ்தாபிசுர் ரஹ்மானை ஒப்பந்தம் செய்ததை பாலிவுட் நடிகர் ஷாருக் கானை இந்து ஆன்மிகத் தலைவர் ஜகத்குரு ராமபத்ரச்சாரியா விமர்சித்தார். நாக்பூரில் PTI செய்தியாளர்களிடம் பேசும்போது, ‘இந்த நடவடிக்கையை மிகவும் வாய்ப்புக் கேடானது என்றும் ஷாருக்கானின் பார்வை எப்போதும் ஒரு துரோகியின் பார்வையைப் போன்றது’ என்றும் அவர் குற்றம் சாட்டினார்.



### வெறுப்புக் கருத்துகள்

அகமதாபாத்தைச் சேர்ந்த விஷால் கோயல், முஸ்லிம் சமுதாயத்தைக் குறிவைத்து ஒரு காணொளியை வெளியிட்டார், அதில் அந்தரங்க உறுப்புகளை வெட்டுவது, முஸ்லிம்களை நாட்டிலிருந்து வெளியேற்றுவது குறித்து வெறுக்கத்தக்க கருத்துகளை தெரிவித்தார். முஸ்லிம் பெண்களைக் குறிவைத்து புண்படுத்தும் காணொளிகளை வெளியிட்ட வரலாறு அவருக்கு உண்டு.



### மிரட்டல்கள்

ஒரு முஸ்லிம் சிறுவன் ‘ஜெய் ஸ்ரீ ராம்’ என்று சொல்லும்படி கட்டாயப்படுத்தப்படும் வீடியோ ராஜஸ்தானின் அஜ்மீர் அருகே ஒரு பகுதியிலிருந்து வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



### நெருக்கடிக்குள்ளாகும் தொழிலாளர்கள்

மேற்கு வங்காளத்தின் பஸ்சிம் பர்தாமன் மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், வங்காள மொழியில் பேசியதற்காக வங்காளதேசிகள் என்ற ஐயத்தினால் மகாராஷ்டிராவில் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது, இது அவர்களின் சொந்த ஊரில் கடுமையான அரசியல் எதிர்வினைகளைத் தூண்டியது.



மகாராஷ்டிராவிலிருந்து மேற்கு வங்கத்திற்குத் திரும்பும்போது இந்தச் சம்பவம் நடந்ததாகத் திலீப் பாக்டி, சமீர் பாருய், பாண்டபேஸ்வரைச் சேர்ந்த மற்றொரு சக ஊழியர் என அடையாளம் காணப்பட்ட தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

### தொடரும் அவலம்

நேபாளத்தில், சாலை மறியல் போராட்டத்தின் போது, வலதுசாரி குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒரு முஸ்லிம் ஆணும் பெண்ணும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது அவர்களைத் தடுத்து நிறுத்தி, ‘ஜெய் ஸ்ரீ ராம்’ என்று முழக்கமிடக் கட்டாயப்படுத்தினர்.



# அக்கரைப் பச்சை 31

அக்காவின் அறையிலேயே சாலிஹா அதிகாலைத் தொழுகையான ஃபஜ்ர் தொழுதுவிட்டு தூங்கினாள். வெளிக்கதவு தட்டும் சப்தம் கேட்டு எழுந்து ஹாலுக்கு வந்தாள்.

'வாங்க மாமி! நான்தான் டீ குடிக்க எழுப்பினேன். மாமியை உசுப்புங்க. லேட்டானா பேசப்போறாங்க' என்று கூறிக்கொண்டே சாயக் கோப்பைகளுடன் சாதிக்கா உள்ளே வந்தாள்.

'நாங்க எந்திரிச்சி தொழுதுட்டு, குர்ஆன் ஓதிட்டு, காப்பி கலந்து குடிச்சிட்டுத் தான் தூங்கினோம்' என்றாள் சாலிஹா.

'ஆமா..! மாமி தொழுதுட்டு எங்களுக்கும் சேர்த்து டீ போட்டு வச்சிட்டுத்தான் கொஞ்ச நேரம் தூங்குவாங்க'

'எங்கே ஹஸினாவைக் காணோம்?' என்று சாலிஹா கேட்க எல்லோரும் வட்டமிட்டு உட்கார்ந்தார்கள். சொல்லிக்கொண்டிருக்கும்போதே ஹஸினா வந்து விட்டாள். தன் அறையிலிருந்து ஓமப்பொடி பாக்கெட்டை எடுத்து வந்தாள். பிஸ்கட்டுடன் டீ குடித்தார்கள்.

'இன்னைக்கு என்ன நாஷ்டா?'

'சாச்சியை செய்யச் சொல்லுங்கள்'

ஆமினாக்கா எழுந்து வந்தாள் 'நேற்றே கறியோடு நெஞ்செலும்பு வாங்கி வந்தேன். தக்கடி போடலாம். உங்களுக்கும் லீவுதானே?'

'கடையில் கொஞ்சம் கணக்குப் பாக்கணும். ஃபஜ்ர் தொழுதுட்டு வரும்போது மாமா வந்தாங்க. அலி பாத்துமா கண்ணா வந்திருக்காங்களாம். ரஷிதா மாமி சாச்சிக்கு ஃபோன் போடுறதாச் சொன்னாங்களாம்' என்றான் தஸ்தகீர்

'சாச்சி வந்திருக்காங்களா? பாத்து எத்தனை வருஷமாச்சு' பீவியம்மாவோடு பிறந்த ஒரே தங்கையான சாச்சியைப் பார்க்க ஆர்வமானாள் சாலிஹா.

'சரி சரி உடனே ஓடிடாதீங்க. நான் கிரிக்கெட் விளையாடிட்டு வர்ரேன். தக்கடி சாப்பிட்டுட்டு கண்ணா வீட்டுக்கும் கொஞ்சம் கொண்டு போகலாம். சாச்சி மதிய சாப்பாட்டுக்கு மேல் கொண்டுபோய் விடவா?' என்றான் சுல்தான்.

'வேண்டாம்பா! நீ வந்து நாஷ்டா பண்ணிட்டு கூட்டிப்போய் விட்டுடு சரி தானேக்கா?' என்று ஆமினாவைப் பார்த்துக் கேட்டாள் சாலிஹா.

'என்னவோமா! ஒரு வாரமாவது இந்தப்பிள்ளைகளோடு இருப்பே. நல்லது கெட்டது சொல்லிக் கொடுப்பேன்னு நெனச்சேன்'

'அக்கா! எல்லாருக்கும் எல்லாம் தெரியும். நாமளும் கொஞ்சம் அப்படி இப்படி அட்ஜஸ்ட் பண்ணி நடக்கணும். அது செய்யல, இது செய்யல, அது நல்லா இல்லன்னு சொல்லுற மாதிரி, இது யார் செஞ்சா? நல்லா இருக்கு! அந்த வேலை என்னய விட அழகா செஞ்சுட்டியேன்னு சொல்லிப் பாருங்க! அடுத்த முறை அதை விட நல்லாச் செய்வாங்க' என்று மருமகள்களுக்குக் கேட்காதபடி மெது வாகப் பேசினாள் சாலிஹா.

‘பாருங்கக்கா..! நேத்துத்தான் சொல்லிக் கொடுத்தேன். பாத்ரூமைப் போய்ப் பாருங்க டைல்ஸ் எல்லாம் கண்ணாடியா மின்னுது. சாதிக்கா அடுப்படியை ஒதுக்க, ஹஸினா கிளீன் பண்ண’ என்று பெருமிதம் கொண்டாள் சாலிஹா.

‘சரி சரி மாவ எடுங்க! தக்கடி ரெடி பண்ணுவோம்’

‘மாமி நாங்களும் கத்துக்குறோம்’

‘கத்துக்குங்க.. கத்துக்குங்க! கெட்டிக்காரப் புள்ளைகளுக்குச் சீக்கிரம் வரும். கைப் பக்குவம் வரணும்’ சொல்லிக் கொண்டே வறுத்த மாவையும், வறுக்காத பச்சரிசி மாவையும் தாம்பாளத்தில் ஒன்றாக்கினாள்.

‘ஒரே மாவாகப் போடக்கூடாதா மாமி..’


‘கொழக்கட்டை சரியாக வராதும்மா.. உடைஞ்சு உதிர்ந்திடும். ஹஸினா! அஞ்சாறு பெரிய வெங்காயத்தை உரிச்சு பொடியா நறுக்குமா. சாதிக்காமா! தேங்காயை உடைச்சு திருகு’ என்று சொல்லிக் கொண்டே குக்கரில் நெஞ்செலும்புக் கறியைத் தாளித்து வேக விட்டாள்.

விசில் வருவதற்குள் ஒரு கற்றை கருவேப்பிலை, ஒரு புதினா கட்டு, கொஞ்சம் மல்லித்தழைகளைக் கழுவி மாவில் போட்டாள். ஐந்தாறு பச்சை மிளகாய்களை அரிந்து போட்டாள். திருவிய அரை முறித் தேங்காயையும் மாவில் கொட்டினாள். ஹஸினாவிடமிருந்து வெங்காயத்தை வாங்கி மாவில் கொட்டி, உப்புத் தூள் தூவி கலந்தாள். இருவரும் பிரமிப்பாக பார்த்தார்கள். ‘இதுக்கு இம்பூட்டு வேலையா மாமி.?’

‘இந்தப் பலகாரங்களெல்லாம் இப்போ யார் செய்றா? முன்னெயெல்லாம் கல்யாண வீட்ல இரவிலேயே பெரிய பானையில் தக்கடி போடுவாங்க. சில ஊர்க்காரங்க திக்கடி என்பாங்க. தலை, குடல், கறி எல்லாம் தாராளமாப் போட்டு காலை பசியாற அதுதான். இப்போ இன்ஸ்டண்டா போடுறோம். முதலிலே சொல்லியிருந்தா ராத்திரியே போட்டிருக்கலாம். இப்போ போட்டு மதியம் தான் திங்கப்போறோம். உங்க பிள்ளைங்களக் கவனிங்க! நா செஞ்சுட்டு கூப்பிடுறேன்’

குக்கரைத் திறந்து ஆணத்தைக் கொஞ்சம் அள்ளி மாவில் ஊற்றி ஊற வைத்தாள்.

**ஆர்வக் கோளாறினால் சாதிக்காவும், ஹஸினாவும் வந்து நின்றார்கள். மாவைப் பிசைந்து கொண்டிருக்கும் சாலிஹாவிடம், ‘மாமி நாங்க என்ன செய்ய?’ என்று வினவினார்கள்.**



வாய் அகலமான பாத்திரத்தில் குக்கரில் உள்ள கறியைக் கொட்டி மசாலாக்கள் கலந்து நிறைய தண்ணீர் சேர்த்து அடுப்பில் ஏற்றினாள். உப்பைக் கலந்தாள். தட்டைப் போட்டு மூடிவிட்டு மாவுக்கருகில் வந்தாள்.

ஆர்வக் கோளாறினால் சாதிக்காவும், ஹஸினாவும் வந்து நின்றார்கள். மாவைப் பிசைந்து கொண்டிருக்கும் சாலிஹாவிடம், ‘மாமி நாங்க என்ன செய்ய?’ என்று வினவினார்கள்.

‘நான் கொழுக்கட்டை பிடிப்பதுபோல் பிடிங்க. ஹஸினா! கொஞ்சம் குழம்பை அள்ளி மாவில் ஊற்றுமா. இறுக்கமாவோ, நெவுப்பாவோ இல்லாமல் பிடிமா!’ என்றாள்.

கொழுக்கட்டை ரெடியானது. கொதிக்கும் குழம்பில் ஒவ்வொன்றாக இறக்கினாள். தீயைக் குறைத்து வைத்து மூடினாள். மீத மாவையும் உருண்டை பிடித்தார்கள். தக்கடியின் மணம் வீட்டில் கமகமக்க ஆரம்பித்தது.

‘மாமி..! குஜராத் பிள்ளைகளின் கதையைச் சொல்லுங்களேன். நீங்க பாட்டுக்கு போயிருவீங்க!’

‘சொல்லுறேன் கேளுங்க! யாரும் அழுதிடாதீங்க.. 2002இல் குஜராத்தில வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டு ரத்த ஆறு ஒடுச்சு. முஸ்லிம்களைத் தேடிப் பிடித்துக் கொன்னாங்க இந்துத்துவா வெறியர்கள். முஸ்லிம்கள் மொத்தமா வாழ்ற இடங்களைக் குறிவெச்சு அழிச்சாங்க. பெண்களை வன்புணர்ந்தாங்க. உயிரைக் காப்பாத்த தப்பிச்சுப் போனவங்களைத் துரத்திச் சென்று கொன்னாங்க.. அதுல ஒன்னுதான்..’

- சாலிஹா சொல்லத் தொடங்க மருமகள்கள் கவலை தோய்ந்த முகத்துடன் கேட்கத் தொடங்கினார்கள்.

(தொடரும்)


# HIJAZ
## LEATHERS PVT. LTD.,

Tanners & Exporters of
Finished Leathers & Fashion Gloves

**HEAD OFFICE :**
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

**TANNERY :**
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

**GLOVE FACTORY :**
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com

• K.ஜலாலுத்தீன்

# இஸ்லாமும் அடிமைத்துவமும்




இஸ்லாம் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட மார்க்கம். இஸ்லாத்தைப் படிக்காமலேயே, இஸ்லாமிய மார்க்கத்தின் மூல ஊற்றுகளான இறைவனின் இறுதி வேதமாகிய திருக்குர்ஆன், இறைவனின் இறுதித்தூதர் முஹம்மத் நபி(ஸல்) அவர்களுடைய வாழ்க்கை ஆகியவற்றைப் படிக்காமலேயே இஸ்லாத்தின் மீதும் முஸலிம்களின் மீதும் அவதூறுகளை பல நூற்றாண்டுகளாகப் பரப்பிக் கொண்டு வருகின்றனர்.

அந்த அவதூறுகளில் முக்கியமான ஒன்றுதான் இஸ்லாம் அடிமைத்துவ முறையை ஆதரிக்கிறது; இஸ்லாம் அதனைத் தடை செய்யவில்லை என்பதாகும். இஸ்லாம் அடிமைப் பெண்களை பாலியல் உறவில் விருப்பம் போல் பயன்படுத்திக் கொள்ள அனுமதி அளித்துள்ளது என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

அடிமை முறை என்பது வலுக்கட்டாயமாக மனிதர்களைப் பிற மனிதர்கள் பிடித்து வைத்து, அவர்களிடமிருந்து வேலையைக் கட்டாயமாக வாங்குவதாகும். இம்முறை பன்னெடுங்காலமாக உலகின் பல நாடுகளில் வழக்கில் இருந்து வந்துள்ளது. இப்படி நிர்பந்தம் செய்யப்பட்ட மனிதர்கள் அவர்களுடைய முதலாளிகளால், பிற பொருட்களைப் போல வாங்கி, விற்கப்பட்டனர். இந்த மிகவும் இழிவான முறை 20ஆம் நூற்றாண்டின் தொடக்ககாலம் வரை நீடித்தது.

இறைவனின் இறுதித் தூதர் முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் 7ஆம் நூற்றாண்டிலேயே எவ்வாறு அடிமைத்தளையின் தளைகளைத் தகர்த்தெறிந்தார்கள் என்பதை இந்த இனிய நூல் விளக்குகிறது.

அடிமைகளை சக மனிதர்களாக மதிக்க வேண்டும், அவர்களுடைய சக்திக்கு அதிகமாக வேலை வாங்கக்கூடாது, தன்னைப் போலவே அவர்களுக்கும் உணவும் உடையும் அளிக்க வேண்டும் என்பன போன்ற சீர்திருத்தங்களை முஹம்மத் நபி(ஸல்) தன் வாழ்நாளிலேயே நடைமுறைப்படுத்திக் காட்டினார்கள். பாவங்களுக்குப் பரிகாரமாக அடிமைகளை விடுதலை செய்வது பரிந்துரைக்கப்பட்டது. அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெற்றவர்கள் மக்களின் தலைவர்களாக உயர்ந்தார்கள். இது தான் இஸ்லாம் செய்த மாபெரும் சாதனை.

கேரள மாநிலத்தின் தலைசிறந்த இஸ்லாமிய அறிஞர்களில் ஒருவரான ஷேக் முஹம்மத் காரக்குன்னு இஸ்லாம் எவ்வாறு அடிமைத்தனத்தைப் பார்க்கிறது, அடிமைக் கலாச்சாரத்தைப் படிப்படியாக அகற்றுவதற்கு என்ன செய்தது என்பதை வரலாற்றுச் சான்றுகளுடன் ஆய்வுக் கண்ணோட்டத்தில் இந்த நூலை எழுதியுள்ளார்.

இந்த நூலை மலையாளத்திலிருந்து இனிய தமிழில் கோவைக் கவிஞர் K.M. முஹம்மத் சிறப்பாக மொழிபெயர்த்துத் தந்துள்ளார். இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்(IFT) மிகச் சிறப்பான முறையில் வெளியிட்டுள்ளது. இந்த நூலை அனைவரும் வாசித்துப் பயன்பெற வேண்டும்.

**நூல்:**
இஸ்லாமும் அடிமைத்துவம்

**ஆசிரியர்:**
ஷேக் முஹம்மத் காரக்குன்னு

**வெளியீடு:**
இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்(IFT),
138, IFT சந்து,
பெரம்பூர் நெடுஞ்சாலை,
சென்னை 600012.
தொலைப்பேசி: 044-26620041

**பக்கங்கள்:**
88

**விலை:**
ரூ. 90/-

# சமரசம் புதிர் போட்டி 2

- இந்தப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடையை **2026 பிப்ரவரி 10**ஆம் தேதிக்குள் கடிதம் மூலமோ, **73050 40386** என்ற வாட்ஸ் அப் எண்ணிலோ, **samarasam.article@gmail.com** என்ற மின்னஞ்சல் மூலமோ அனுப்பலாம்.
- சரியான விடையை எழுதுபவர்களுக்கு ரூபாய் 200 பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுத் தொகை வழங்கப்படும்.
- இப்பகுதியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் குர்ஆன், ஹதீஸ், கடந்த சமரசம் இதழ்கள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.
- போட்டியில் கலந்து கொள்பவர் தங்களின் பெயர், முகவரி, அலைப்பேசி - G Pay எண் ஆகியவற்றை அனுப்பவும்.

1. 'எவனொருவன் ஒரு மனிதனைக் கொலை செய்ததற்குப் பகரமாக அன்றி அல்லது பூமியில் குழப்பத்தைப் பரப்பிய காரணத்திற்காக அன்றி வேறு காரணத்திற்காக மற்றவனைக் கொலை செய்கின்றானோ அவன் மனிதர்கள் எல்லோரையும் கொலை செய்தவன் போல் ஆவான். மேலும், எவனொருவன் பிறிதொருவனுக்கு வாழ்வு அளிக்கின்றானோ அவன் எல்லா மனிதர்களுக்கும் வாழ்வு அளித்தவன்போல் ஆவான்' இந்தத் திருக்குர்ஆன் வசனம் எந்த அத்தியாயத்தில் இடம் பெற்றுள்ளது?

   அ) அல் அன்ஆம் ஆ) அல் மாயிதா

2. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். 'அண்டை வீட்டாருடன் நல்ல விதமாக நடந்து கொள்ளுதல் குறித்து ஜிப்ரீல்(அலை) அவர்கள் என்னிடம் தொடந்து அறிவுறுத்திக் கொண்டே இருந்தார்கள். எதுவரை எனில் அண்டை வீட்டாரை எனக்கு வாரிசாக அறிவித்துவிடுவார்களோ என்று எனக்கு ஐயம் வரத் தொடங்கிவிட்டது' இந்த நபிமொழியின் அறிவிப்பாளர் யார்?

   அ) ஆயிஷா(ரலி) ஆ) அபூஹுரைரா(ரலி)

3. நபி(ஸல்) அவர்கள் தோழர்களிடம் 'இன்று உங்களில் நோன்பு நோற்றிருப்பவர் யார்? ஜனாஸாவைப் பின் தொடர்ந்தவர் யார்? ஓர் ஏழைக்கு உணவளித்தவர் யார்? நோயாளியை நலம் விசாரித்தவர் யார்?' என்று வினவியபோது அனைத்திற்கும் நான் என்று பதிலளித்த நபித் தோழர் யார்?

   அ) உமர்(ரலி) ஆ) அபூபக்ர்(ரலி)

4. உறுதிமிக்க செயல் என்று இறைவன் எந்தப் பண்பைக் கூறுகின்றான்?

   அ) பொறுமை ஆ) வீரம்

5. 22 மொழிகள் கற்றுத் திகழ்ந்த இஸ்லாமிய சட்டம், சர்வதேச சட்டத்தில் நிபுணத்துவம் பெற்ற அறிஞர்

   அ) சுலைமான் அல் ராஜிஹி
   ஆ) டாக்டர் முஹம்மத் ஹமீதுல்லாஹ்

6. ஐநா வரலாற்றின் முதல் பெண் பொதுச் செயலாளர் யார்?

   அ) ஷெய்கா நாசர் அல் ஒவைசி
   ஆ) ஃபாத்திமா அல் அம்ரி

7. ஃபலஸ்தீன விடுதலைப் போரில் உயிர்த் தியாகம் செய்த ஹமாஸின் அல் கஸ்ஸாம் இராணுவப் பிரிவின் செய்தித் தொடர்பாளர்

   அ) ஷஹீத் அபூ உபைதா
   ஆ) ஷஹீத் இஸ்மாயீல் ஹானியா

8. கிரீன் பெல்ட் மூவ்மெண்ட் எனும் சுற்றுச் சூழல் இயக்கத்தின் போராட்ட மங்கை

   அ) மயிலம்மா ஆ) வங்காரி மாத்தாய்

9. பைக்காரா அணை எங்குள்ளது

   அ) நீலகிரி ஆ) மைசூர்

10. ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு எது?

   அ) தாய்லாந்து ஆ) பின்லாந்து

# அழகு

- சோழா புகழேந்தி

தத்து பித்து மொழி பேசும்
முத்து மழலைச் சொல்லழகு
செங்கதிரோன் வருமுன்னே
சிறு குயிலின் குரலழகு

பனி மகுடம் சூடிக் கொண்ட
பசும்புல்லின் பேரழகு
மௌனத்தைக் கலைத்துவிடும்
மகிழ்ச்சிமிகு அலையழகு

தூதுவரும் தென்றலோடு
தூவும் மழைக் குளிரழகு
அனிச்சமலர் விரிப்பிருந்தும்
அன்னை மடியில் துயிலழகு

நிழல் கொடுக்கும் கனிமரங்கள்
நெஞ்சினிக்கும் நினைவழகு
கோடையிலே இறங்கிவந்து
கொண்டாடும் மழையழகு

உள்ளதையும் தந்துவிட்டு
உவகை கொள்ளும் உயிரழகு
கண் விழித்துப் பார்க்கையிலே
காணும் யாவும் தனியழகு


இரண்டு படங்களுக்குமிடையே 7 வித்தியாசங்கள் உள்ளன. கண்டுபிடியுங்கள் குட்டீஸ்!



## சித்திரம் பேசுது..!



ஷப்னாஸ் ஃபாத்திமா, 11ஆம் வகுப்பு
இஸ்லாமியா மெட்ரிக் குலேஷன் மேல்நிலைப் பள்ளி, கோவை




D.K. தியானா ஜொஹ்ரா,
கிரசண்ட் உயர்நிலைப்பள்ளி,
பார்த்திபனூர், இராமநாதபுரம்

# தொழில்நுட்ப உலகின் இளைய நட்சத்திரம் உஸைர் மாலிக்


உஸைர் மாலிக்

காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரின் சயீத்போரா ஈத்கா பகுதியைச் சேர்ந்த உஸைர் மாலிக் (Uzair Malik) என்ற 14 வயது மாணவன், தனது அபாரமான மென்பொருள் உருவாக்கும் திறமையால் ஒட்டுமொத்த நாட்டின் கவனத்தையும் ஈர்த் துள்ளார். ஒன்பதாம் வகுப்பு பயிலும் உஸைர் இதுவரை 31 மொபைல், இணையச் செயலிகளை (Apps) உருவாக்கி சாதனை படைத்துள்ளார்.

உஸைரின் இந்த வியக்கத்தக்க பயணம் கடந்த 2021ஆம் ஆண்டு தொடங்கியது. தனது தந்தையின் நண்பர் ஒருவர் கணினியில் மென்பொருள்களைக் கையாளுவதைக் கண்டு உத்வேகம் பெற்ற உஸைர், மென்பொருள் குறியீட்டு முறையான கோடிங்(Coding) மீது ஆர்வம் காட்டினார். இவருக்கு எந்தவொரு நிறுவனமும் அல்லது ஆசிரியரும் முறையாகப் பயிற்சி அளிக்கவில்லை. மாறாக, இணையதளங்கள் யூடியூப் (YouTube) போன்ற தளங்களின் உதவியுடன், சுய முயற்சியால் புரோகிராமிங்(Programming) நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டார்.

உஸைர் உருவாக்கியுள்ள 31 செயலிகளும் பல்வேறு தேவைகளுக்காக வடிவமைக் கப்பட்டுள்ளன. இதில் கல்வி, பொழுதுபோக்கு, அன்றாடத் தேவைகளுக்கான செயலிகள் அடங்கும். குறிப்பாக ஒரு முழுமையான வீடியோ எடிட்டிங் செயலியை(Video Editing App) உருவாக்கும் முயற்சியில் அவர் தற்போது ஈடுபட்டுள்ளார்.

மென்பொருள் உருவாக்கத்தில் ஏற்படும் பிழைகளை(Bugs) சரிசெய்வது என்பது அனுபவம் வாய்ந்த வல்லுநர்களுக்கே சவாலான காரியம். ஆனால் ஒருமுறை தனது செயலியில் ஏற்பட்ட சிக்கலான பிழை ஒன்றைச் சரிசெய்ய, உஸைர் 12 மணிநேரம் இடைவிடாது கணினி முன் அமர்ந்து போராடி வெற்றி கண்டார். அவரது இந்த விடாமுயற்சியே அவரை மற்ற மாணவர் களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது.

பெரும்பாலான செயலிகள் இன்று லாபத்தை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்படும் நிலையில், உஸைரின் அணுகுமுறை முற்றிலும் மாறுபட்டது. சாமானிய மக்களுக்குப் பயனுள்ள கருவிகளை இலவசமாகவோ அல்லது மிகக் குறைந்த விலையிலோ வழங்குவதையே அவர் லட்சியமாகக் கொண்டுள்ளார். அவரது ஒரு செயலி வெறும் 20 ரூபாய் விலையில் கிடைக்கிறது. இதன் பின்னணியில் உள்ள பராமரிப்புச் செலவுகளை (Backend Costs) ஒப்பிடுகையில், இது லாபத்திற்காக அல்லாமல் மக்கள் சேவைக்காகவே உருவாக்கப்பட்டது என்பது புலனாகிறது.

தற்போது காண்டர்பால்(Ganderbal) மாவட்டத்தில் உள்ள ஹில்டாப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு பயின்று வரும் உஸைர், கல்வியிலும் சிறந்து விளங்குகிறார். இவரது எதிர்காலக் கனவு குறித்துக் கேட்டபோது, ‘தேசிய அளவில் புகழ்பெற்ற இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தில்(IIT) பயின்று, உலகத் தரம் வாய்ந்த மேம்பட்ட மென்பொருள்களை இந்தியாவுக்காக உருவாக்க வேண்டும் என்பதே தனது லட்சியம்’ எனத் தன்னம்பிக்கையுடன் கூறுகிறார்.

காஷ்மீர் பள்ளத்தாக்கில் உள்ள இளைஞர்களுக்கு மட்டுமின்றி நாட்டிலுள்ள அனை வருக்கும் உஸைர் மாலிக் ஒரு பெரும் உத்வேகமாகத் திகழ்கிறார். வாழ்த்துகள் உஸைர்!

**– பேராசிரியர் N. அமானுல்லாஹ்**

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed by : S. Rajan at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

ST COURIER®
The People's Choice

ISO 9001 : 2015

# WE NOW ACCEPT TO PAY & COD BOOKINGS

" A NEW GATEWAY FOR YOUR BUSINESS "




An Affiliate Of
WCA INTER GLOBAL

044-61266666

www.stcourier.com | helpdesk@stcourier.com | Follow Us On -

Posted at Egmore RMS - Patrika Channel
SAMARASAM Tamil Fortnightly 16 - 31 JANUARY 2026 Registered With the RNI No : 33723/81
Postal Regn. No. TN/CCN/428/2024-2026 WPP No : TN/PMG(CCR)/WPP 450/2024-2026
(Publication Date 1st & 16th of Every Month) Posted on 1-3 & 16-18 of Every Month.

TRADITIONAL TRUST SINCE 1925
LKS
100 YEARS

ஓர் இறைநம்பிக்கையாளனைச் சபிப்பது
அவரைக் கொலை
செய்வதற்குச் சமமாகும்

– முஹம்மது நபி(ஸல்) அவர்கள்

கதீட்ரல் ரோடு
L.K.S.
கோல்டு பேரடைஸ்
35. கதீட்ரல் ரோடு, சென்னை – 600 086.
போன் : (044) 2811 3611


If undelivered, please return to : **Samarasam, 138, Perambur High Road, Chennai - 600 012.**